உ

" தொண்டர் நாள் தொறுந் துதிசெய அருள் செய்
கேதீச்சரமது தானே. "

2.32

# [T]UKETHEESWARAM PAPERS

## [திரு]க்கேதீஸ்வர வெளியீடுகள்

COMPILED, EDITED & PUBLISHED

BY

SIR KANTHIAH VAITHIANATHAN

தொகுத்துத் திருத்திப் பதிப்பித்தவர்

சேர். கந்தையா வைத்தியநாதன்

[N]ett Proceeds of the Sale of this Publication will be devoted to the Temple Building Fund.

[இந்]தப் பிரசுர விற்பனையாற் கிடைக்கும் பணம் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி நிதிக்குச் சேர்க்கப்படும்.

1957

# Thiruketheeswaram Temple Restoration Society

—//—

## OBJECTS

The objects of the Society include:

*(a)* the restoration and maintenance of Thiruketheeswaram Temple and its temporalities according to the tenets and ideals of Saivaism;

*(b)* the construction and management of Thiruketheeswaram Temple and other temples for divine worship according to the tenets and ideals of Saivaism;

*(c)* the establishment and management of Madams, Libraries, Reading Rooms and Schools;

*(d)* the propagation, dissemination and advancement of Saiva religion.

An important idea underlying the objects of the Society is to restore Thiruketheeswaram as a religious, intellectual and cultural centre of importance in keeping with the historic role played by this ancient city in antiquity.

*( Society's Report for period 1948—1953. )*

" தொண்டர் நாள் தொறுந் துதிசெய அருள் செய்
கேதீச்சரமது தானே. "

---

# THIRUKETHEESWARAM PAPERS

# திருக்கேதீஸ்வர வெளியீடுகள்

COMPILED, EDITED & PUBLISHED

BY

**SIR KANTHIAH VAITHIANATHAN**

தொகுத்துத் திருத்திப் பதிப்பித்தவர்

சேர். கந்தையா வைத்தியநாதன்

---

Nett Proceeds of the Sale of this Publication will be devoted to the Temple Building Fund.

இந்தப் பிரசுர விற்பனையாற் கிடைக்கும் பணம் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி நிதிக்குச் சேர்க்கப்படும்.

---

1957

Price } Rs. 2/—
விலை } ரூபா

# சைவ நீதி

—//—

(சிவ புண்ணியத்தெளிவு)

மாதவர் மடங்க ளாதி வரதன்மந் திரங்க ளாதி
நாதமா மிலிங்க மாதி நளினபுட் கரிணி யாதி
சேதமுற் றிடின்முன் போலச் செய்கின்றோர்க் குறும்பலந்தான்
ஓதுமுன் செய்தோர் தம்மி லாயிரங் குணித மோங்கும்

(இ-ள்) பெரிய தவத்தோர் இருக்கின்ற மடங்கள் முதலானவைகளும், கடவுளுடைய கோவின் முதலானவைகளும் நாதமாகிய இலிங்கம் முதலானவைகளும், தாமரையையுடைய குளம் முதலானவைகளும் பழுதடைந்தால், அவைகளை முன்போலச் செய்கின்றவர்களுக்கு உண்டாகும் புண்ணியமானது, சொல்லப்பட்ட முன் அவைகளைச் செய்தவர்களுக்கு உண்டானதிலும் ஆயிரம் மடங்கு அதிகமாம். (எ-ம்)

The above verse lays it down that the Renovation of Temples, Madams and Theertha Tanks which have gone into disrepair, is a thousand times more meritorious an act than that of those who originally constructed them.

The corollary to this would be that it is a thousand times better to repair and re-consecrate an existing Temple than construct a new one.

The reason is obvious, though superficially enigmatic. This is Saiva Way. (சைவ நீதி) .

---

# CONTENTS
# பொருளடக்கம்

—//—


| | | Page |
|---|---|---|
| Editorial Note | முகவுரை | 7—8 |
| Thiruketheeswaram<br>The Story of an ancient Siva Temple | Kanthiah Vaithianathan | 9 |
| Mr. P. Coomaraswamy's Letter of 1893 | | 15 |
| ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் கூற்று | | 20 |
| திருக்கேதீஸ்வரம்<br>புராதன சிவாலயத்தின் வரலாறு | கந்தையா வைத்தியநாதன் | 21 |
| தேவார காலங்கண்ட மாதோட்ட வளநாடு | | 30 |
| இந்துசாதன வெளியீடுகள் | | 35 |
| ஸ்ரீமான் த. கைலாசபிள்ளை அவர்கள் முகவுரை | | 38 |
| திருக்கேதீச்சர மகிமை | | 39 |
| தேவாரம் | திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் | 43 |
| தேவாரம் | சுந்தரமூர்த்தி சுவாமிகள் | 47 |
| Jambukola (Kankesanturai) and Mahatittha (Mantota) | B. J. Perera | 53 |
| Excavations at Thiruketheeswaram | S. Sanmuganathan | 59 |
| முப்பது ஆண்டுகளுக்கு முன் | குல. சபாநாதன் | 61 |
| Mantota in Early History & Literature | C. Rasanayagam | 67 |



P. T. O. ( மறுபக்கம் பார்க்க )

## வேறும் பொன் மொழிகள்

| | Page |
|---|---|
| சைவ நீதி | 2 |
| தொண்டர் பெருமை | 8B |
| அப்பர் சுவாமிகள் திருத்தாண்டகத்தில் திருக்கேதீச்சரம் | 34 |
| திருத்தொண்டர் புராணத்தில் தீருக்கேதீச்சரம் | 37 |
| மணிவாசகரின் திருவாசகத்தில் திருக்கேதீச்சரம் | 42 |

## படங்கள்

| | |
|---|---|
| ஈஸ்வர ஆலயம் Plate No. 4 | 5 |
| இராசகோபுர வாசல் Plate No. 6 | 8A |
| ஆலயங்களின் நிலப் படம் Plate No. 2 | 17 |
| பழைய ஆலயத்தைச் சுற்றியுள்ள புதுக்கட்டடங்கள் Photo | 40 |
| அம்பாள் ஆலயம் Plate No. 5 | 51 |




ESHVARA SHRINE - SIDE ELEVATION. SCALE - 1 INCH = 3 FEET.

SOUTH VIEW.

M SELLAKKANNU STHAPATI,
M. VAIDHYANATHA STHAPATI,
CONSULTING & PRACTISING ARCHITECTS,
KARAIKUDI. S. INDIA.

# INTRODUCTION

This is a humble effort to collect in one place and bring before the Hindu public and students of history and religion at large, as many as possible of the more important published religious articles and hymns, secular essays and other documents relating to Thiruketheeswaram Temple and the Mantota area in which the Temple is situated. In the present state of the absence of a critical scholarly analysis of archaeological, historical and traditional material available in Ceylon, it has been found desirable to leave on record everything practically in the form in which one has seen, read or heard about the subject. What has been recorded here is probably only a small portion of what there is. Nevertheless, it is hoped that the mass of mythological, traditional, archaeological and historical material that there is about this most ancient very highly venerated Temple of the Hindus will stimulate students of history and religion to get down to the job of sorting out the grain from the chaff.

To the pious Saivite, I can only say that I have approached every aspect of this subject with reverence and after much pious heart-searching. This is not an attempt at producing a Sthala Puranam. That will be a super-human task, particularly at the present age of critical inquiry. There is much in this little book to strengthen one's faith in the infinite Grace of Gouri Ambal Sametha Thiruketheeswaranathan and to make one stand in awe and reverence at the procession, through the ages, of mythology, tradition, travel stories, and historical faces, while God alone is. Who but HE could have been the ever-present willing witness behind the moving scene of the demolition more than once of the succession of Temples at this site and who but HE could have prompted and promoted again and again its rebuilding? The faith that cannot stand traveller's tales or historical facts may be blind faith and not founded on Realisation; such faith requires mending.

I make no apology for introducing some articles in English. I am only sorry that limitation of space and time has prevented the rendering in Tamil of all the English articles except the first which is in the nature of a bird's eye view of the whole scene. What is needed are two comprehensive volumes on Thiruketheeswaram, one in Tamil and the other in English. I pray that the present humble effort may be the fore-runner of those from abler hands.

"Koddil"
Thiruketheeswaram, April 10, 1957. K. Vaithianathan.

# முகவுரை

"அவனன்றி ஓர் அணுவும் அசையாது" எனும் பெரிய
ஆப்தர் மொழி ஒன்று கண்டால்
அறிவாவ தேதுசில அறியாமை எது இவை
அறிந்தார்கள் அறியார்கள் ஆர்?
மௌனமோடு இருந்ததார் என்போல் உடம்பெலாம்
வாயாய்ப் பிதற்றும் அவர் ஆர்?
மனதெனவும் ஒருமாயை எங்கே இருந்து வரும்?
வன்மையோடு இரக்கம் எங்கே?
புவனம் படைப்பது என்? கர்த்தவியம் எவ்விடம்?
பூத பேதங்கள் எவிடம்?
பொய் மெய் இதம் அகிதம் மேல் வரும் நன்மை தீமையொடு
பொறை பொருமையும் எவ்விடம்?
எவர் சிறியர்? எவர் பெரியர்? எவர் உறவர்? எவர் பகைஞர்?
யாதும் உனை அன்றி உண்டோ?
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிராகி
எங்கும் நிறை கின்ற பொருளே!"

"நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே?"


பின்வரும் கட்டுரைகளில் கூறப்பட்டுள்ள அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடைய தெனவே கொள்ளவேண்டும். குற்றங்களை விடுத்துக் குணங்களை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

பிற்பகுதியில் காணப்படும் ஆங்கிலக் கட்டுரைகள் மூன்றையும் மற்றப் பதிப்பில் தமிழில் மொழிபெயர்க்கத் திருவருள் துணை புரிவாராக.

க. வைத்தியநாதன்.

"கொட்டில்"
திருக்கேதீச்சரம்,
துர்முகி ௵, பங்குனி 28.

PLATE No 6




THREE STOREYED RAJA GOPURA
FRONT ELEVATION.

SCALE-1 INCH - 3 FEET

THREE STOREYED RAJA GOPURA
SIDE ELEVATION.

M. SELLARRANNU STHAPATI.
M. VAIDHYANATHA STHAPATI,
CONSULTING & PRACTISING ARCHITECTS
KARAIKUDI. S. INDIA.

# தொண்டர் பெருமை

"ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணியல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னுல் விளம்புந் தகையதோ?"

(சேக்கிழார்)

வீரம் எத்தகையதென்பதை அப்பர் சுவாமிகள் சொல்லக் கேட்டுத் தெளிக:

"வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடுமாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்(டு)
ஊன மொன்றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே"

(அப்பர்)

காரணம்? தொண்டர்களுக்கு யார் எத்தீமைகள் செய்யினும் அவற்றுல், அவர்களுக்கு "இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை":

"மாசில் வீணையு மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை யிணையடி நீழலே"

(அப்பர்)

ஆகவே, கேதீச்சரத்தின் பெருமையும் தொண்டர் பெருமையே.

"தொண்டர் நாள்தொறுந் துதிசெய அருள்செய்
கேதீச்சர மதுதானே"

(சம்பந்தர்)

# THIRUKETHEESWARAM

## THE STORY OF AN ANCIENT SIVA TEMPLE.

—//—

KANTHIAH VAITHIANATHAN.

---

*(Adapted from an article contributed to THE NEW LANKA, in October, 1954.)*

The worship of Siva, as the Supreme, the Absolute, is the oldest and most wide-spread of all religions of antiquity. Tradition claims it to be as old as creation itself. Centuries before Himalayas rose and became the symbol of spiritual tradition, Siva cult was prevalent all over the vast Indo-African-Polynesian continent of which our little Ceylon formed also a part. Archaeological discoveries by Sir John Marshall in the Indus valley and George Febrei and others in Malta, Madagascar and Crete, seem to indicate that nearly ten thousand years ago Siva was worshipped as Maha Deva—the great God—a form of proto-Saivaism. The seals found at Mohenja-Daro also depict the God as a deity with three faces—the Trinity ideal—possibly a version of Brahma, Vishnu and Siva of later date. The Trimugha (three-faced) Siva of 3,000 B. C., is of as much interest as the single - faced deity of the earlier seals.

According to the Puranas there were 1,008 Siva temples in the Northern regions beyond Himalayas, 1,008 between Himalayas and Cape Comorin and 1,008 in the continent South of Cape Comorin. Ceylon is only a dot in the vast third area.

Thiruketheeswaram, in the village of Mantota is one of the two most sacred pre - historic temples in Ceylon which have been referred to in Sanskrit Classical Literature and received laudatory hymns from Saiva Saints. The other is Koneswara (Trincomalee). They are reputed as Dakshana (Southern) Kailas, as counterpart of Northern Kailas, which is in the Himalayas.

Ravana, the King of Lanka, was a devotee of Koneswara and his father - in - law Mayan, is said to have built the ancient temple at

Thiruketheeswaram. Rama, who built the Sivan temple at Rameshwaram, on his way back to Ayodhya from Lanka, is reputed to have worshipped Lord Siva at Thiruketheeswaram as well. According to tradition, Arjuna, the hero of Mahabaratha war and the kinsman and disciple of Lord Krishna, also visited Thiruketheeswaram in the course of his pilgrimage to the South. It is said that it was during those travels that he met the Naga Princess, Alli Arasani, who ruled over the region adjoining Mantota. Some ruins on the mainland North of Mannar Island are to-day pointed out as the forts of Alli.

According to Buddhist literature, the place was known as Mahatittha from third century B. C. If, as claimed by certain scholars in accord with tradition, Rama, Agastyar and Arjuna crossed over to Lanka through this harbour at Mantota, it may be surmised that Prince Vijaya too and his party came by the same route. If so, the Sivan Temple at which Upatissa, the Brahmin priest, who accompanied Vijaya, is said to have performed Poojah cannot be any other shrine than Thiruketheeswaram itself. The Yalppana Vaipava Malai, a record of historical traditions prepared by Mailvagana Pulavar, a Jaffna poet, for the Dutch Governor of Jaffna in 1736, states:

> " Prince Vijaya, soon after he landed on the shores of Ceylon in the sixth century B. C. caused to be rebuilt the Temple of Thiruketheeswaram, which had long been in ruins. "

In the mediaeval period, the Pandian Kings were devoted to Lord Ketheeswara and improvements to His Temple had been effected by them in the sixth century A.D., by which time the sea-port, Maha Thuvadda (Matota) had become Mantota.

The next important reference to Thiruketheeswaram is in the hymns of the Saiva Saints, Thirugnanasambanthamoorthy Nayanar and Sundaramoorthy Nayanar, who lived in the seventh and nineth centuries respectively. Mantota is described in those hymns in great detail, as a fertile and flourishing land. The shrine itself is praised as one that bestowed on the worshippers liberation from Karmic Law and the enjoyment of supreme wisdom and bliss. The following gives an idea of the characteristics of the sea and landscape of that period:

> The waves of the sea adjoining the temple reached the skies and its roar vied with the festival drums and suppressed

all other sounds of the thickly populated country-side, implying that at that time ocean-going vessels could have passed through the creek between Mannar Island and the mainland, which has since become much silted up, and more so during British times owing to two obstructions recently built, namely, the causeway for the road and the railway track. The harbour itself was a safe refuge for many ships from various countries which crowded into it at any one time. The city of Mantota was rich with gold, pearls and precious stones. In its groves of coconut, mango, arecanut and plantain the density of trees was so great that monkeys sported from branch to branch and flocks of peacocks danced in their cool shade. The scent from the flowers of the well laid gardens oppressed the air and the hum of swarms of bees which kept on flitting from flower to flower, shrub to shrub, competed with the strains of music emanating from the homes of citizens.

This prosperity is in keeping with the description in Raja Ratna Kara of the suzerainty of the Tamils in what was then the most populated parts of Ceylon during the nineth and tenth centuries.

The next two centuries were periods of even greater progress and by 1,028 A.D., during the reign of Rajendra Chola, Mantota was a beautiful city of 10 square miles with broad roads, palatial buildings, etc. The Temple had seven Prakarams (circuits) and tall towers on all four sides of each circuit, as in the case of present temples at Madura or Srirangam. Besides vast paddy fields in the neighbouring areas, there was also sugar cane cultivation; and weaving industry flourished. Inscriptions in support of these statements are said to be extant.

Sixteenth to the Eighteenth centuries were the darkest periods in the history of Thiruketheeswaram. Besides ravages caused by nature and neglect, the Portuguese invaders destroyed the Temple and ravaged the city and, literally, carried away its stones. The Dutch saw to it that nothing happened here.

The first attempt to restore the Thiruketheeswarm Temple was made in 1872 by the great Hindu reformer, Sri La Sri Arumuga Navalar; but his efforts met with no immediate success on account of the apathy of the Saivites and the opposition from the Christians

of that period. Fourteen years after his death, his dream was fulfilled when the jungle land, in extent about 40 acres, was bought by the Saivites of Jaffna at an auction sale held at Jaffna Kachcheri on 13-12-1893 by Sir William Twynam, C.C.S., Government Agent, who has also left in his Administration Report some permanent record of the past glory of Thiruketheeswaram Temple.

An authentic record of the conditions of this ancient temple site immediately before any restoration work was commenced may be gleaned from a paper read by Mr. W. J. S. Boake, C.C.S., on November 7, 1887, entitled "Thiruketheeswaram, Mahatirtha Matoddam or Mantoddai" ( See Royal Asiatic Society Journal, Volume No. 35 )

> " Nothing remains above ground of this ancient city except a few fragments of sculptured figures, broken tiles, bricks and pieces of pottery. Its site is extremely overgrown by low dense jungle, the only large trees being a few tanaku and boabab. Indications may still be seen of the old streets, and there are two or three old wells. The foundations of a brick building, somewhere about the centre of the hill, on which I believe the greater part of the city stood, are pointed out as those of the palace; and the entrance of the temple is said to have been near the old well."

Mr. P. Ramanathan (later Sir Ponnambalam) who appears to have been present at the meeting, contradicted a part of this report and added an illuminating comment, particularly, on the Hindu aspect of the site. He also said that the sites of old buildings were not part of a secular city but were all appurtenances of the Temple and that the population of the area were office-bearers, devotees and workers of the Temple. One significant characteristic of the area which Mr. Boake and the earlier British observers overlooked was the presence of a double moat round the so-called "citadel", which, it is now clear, contained a sea water barrier outside and a fresh water protection ( which was not accessible to any casual invader) inside, which must have formed a strong defence of the property of a rich Temple such as it was. Mr. Boake also stated :-

> " Inscriptions have been found in some stones, of which rubbings were furnished to the Society by Mr. E. M. Byrde, but they have been found so imperfect that it has not been possible to decipher them."

Recent archaeological excavations and inspections, particularly those by the late Mr. S. Sanmoganathan have, it is understood, led to the deciphering of some of these inscriptions.

In support of Sir P. Ramanathan's surmise that the ancient "citadel" within the two moats consisted purely of religious buildings, we now know many confirmatory facts. The appurtenances of the Temple overflowed even the limits of the "citadel". There are two villages about 2 miles away from the Temple; one is called Papamoddai, meaning the residence of Brahmin priests and the other, Maligaithiddal, the area for palaces. There is also a large and influential community of cultivators resident beyond these villages whose ancestors were artificers in metal working for the Temple.

The excavations in the neighbourhood of the Temple have confirmed the existence here of at least one ancient Temple - city of great eminence. There are indications here, as in all sites of such great antiquity, of the remains of such earlier cities beneath the foundations of the last which was destroyed in the middle ages.

The original site of the Temple, which had been razed to the ground, was traced in June, 1894 from the clue afforded by the old well on the Temple land. The Sivalingam which was in worship in pre-Portuguese period, a Nandi and a Ganesha image were discovered near the old foundations of what is believed to be the old Temple site. It was recorded in contemporary press that Mr. Pasupathy Chettiar of Jaffna, Honorary Treasurer of the Saivaparipalana Sabai, took Kurukkals, temple architects, masons and labourers from Jaffna to Thiruketheeswaram and spent eight months in the fever-infested jungle between January and August 1894 to conduct investigations and construct a small new Temple on the old site, most of which still survive.

The Naddukoddai chettiars both in Jaffna and in Colombo took an interest in this Temple from the beginning. Subseqently, the Temple itself came under the management of the Old and New Kathiresan Temples of Colombo. At present, it is under the management of a Panchayat of the Thiruketheeswaram Temple Restoration Society on which, by a rule of the Society, the two Colombo Temples will always have representation.

The present Shrines which were consecrated on 28th June, 1903, had gone into disrepair by the passage of time and were renovated (without any additions or structural improvements) in August 1952 at the instance of the Thiruketheeswaram Temple Restoration Society, which had its beginnings at a meeting of the Hindus in Colombo on October 19, 1948. This enables the poojas and worship to be continued uninterrupted, for the time being, in the central Shrines while the work of reconstruction goes on with the prakaram shrines, Thirumathil (inner boundary wall) and Rajagopuram—see ground Plan, Plate No. 2, and Rajagopuram Plan, Plate No. 6. The erection of new Eeshvara and Ambal shrines and their respective Artha Mandapams depicted in Plates 4 and 5 are due to be taken up shortly and constructed "entirely in dressed granite stones." When these are completed Phase I of the constructions will be over. Phase II of the constructions will comprise the Outer (or Vahana) Weedi with the outer boundary wall with the necessary gopurams on all four sides including one of seven tiers at the eastern entrance. In the Eastern Courtyard of the Outer Weedi there will be the 'Utsava Mandapam' (Vasantha Mandapam) and other attendant buildings. Outside the outer wall come the Ther (Car) Weedi, which will have a large open area in the east to accommodate a large concourse of devotees. The surrounding lands have been laid out with intersecting roads to provide for flower gardens, parks and groves, madams and chatirams, and residences for priests, devotees and temple servants. A Vedapadasalai (school for religious studies) and retreats for Rishis have also not been forgotten.

These plans, which have been prepared with the best advice available in South India and Ceylon of religious divines, Kurukkals and temple architects, may not amount to much when compared with the glories of the past, but by Grace of Gouri Ambal Sametha, Thiruketheeswaranathar, will present the most complete and beautiful Siva Temple in Ceylon.

# Mr. P. COOMARASWAMY'S LETTER DATED 15TH NOVEMBER 1893, ADDRESSED TO S. NAGALINGAM Esq., JAFFNA.

Colombo 15th November 1893

*My dear Mr. Nagalingam,*

I had an interview with the Governor yesterday and urged strongly our claim for the Tirukkeditchchuram land. He says that during his regime no free grant should be made of lands to any religionists. He also said that the Roman Catholics had also urged their claims to this very land. He further said that he hoped that the Hindus would become the purchasers. It now remains for you to form a committee in Jaffna and collect subscriptions **at once,** so far as I am personally concerned I shall be glad to give my subscription. But I am afraid that you cannot expect any subscriptions from the Hindu residents in Colombo as there is already here your agent to collect subscriptions for your school.

At a meeting of the Sub Committee of the Legislative Council on the Budget, I brought for discussion the Jaffna Friend-in-need Society; after a great deal of trouble Sir Noel Walker at last agreed to consider one of my proposals viz: that the Society's accounts should be audited by the Auditor General.

I was privately informed by an official (and I shall thank you to keep this strictly private) that the Government are aware that the reforms required should be granted, but that so long as Mr. Twynam is at Jaffna, nothing could be done.

By the way, the Governor wished to know how the Markets Ordinance is working at Jaffna.

Yours truly,

P. COOMARASWAMY.

# KEY TO PLATE No. 2.

## STRUCTURES SHOWN ON THE PLAN.

1 Garbhagraha—Thiruketheeswaranather
2 Mukha (Artha) Mantapam
3 Maha Mantapam
4 Chandikeswarar Shrine
5 Ambal Shrine
6 Niruthа Mantapam
7 Nadarajar Shrine
8 Palliyarai
9 Nandi, Pelipeedam and Dhuvarasthampam
10 Store Room
11 Baga Salai
12 Pathigam Padiya Sambanthamoorthy Nayanar
13 63 Nayanmar
14 Ambal Sannathi South Entrance
15 Samayachariyarkal
16 Pathigam Padiya Sunderamoorthy Nayanar
17 Vinayakar Shrine
18 Somaskander Shrine
19 Maha Vishnu Shrine
20 Maha Lingam
21 Pancha Linga Shrine
22 Maha Lakshmi Shrine
23 Sri Subramaniyar Shrine
24 Alankara Mantapam Kuradu
25 Jewel Room (Strong Room)
26 Yaga Salai
27 Bhairava Shrine
28 Suriyan Kuradu
29 Three Storeyed Raja Gopuram
30 Santhiran


**Note:-** Structures on the second Prakaram not shown on Plate 2

PROPOSED TEMPLE IN TWO PRAKARAS FOR SRI GOURI AMBAL SAMETA TIRUKETHEESHVARANATH

TIRUKETHEESHVARAM CEYLON.

SCALE: 1 INCH = 10 FEET.

PLATE No. 2



PLAN AT BASEMENT LEVEL (SHOWING THE DETAILS OF THE PROPOSED IMMEDIATE CONSTRUCTION)

M SELLAKKANNU STHAPATI,
M. VAIDHYANATHA STHAPATI,
CONSULTING & PRACTISING ARCHITECTS
KARAIKUDI, S. INDIA

# 2ம் படத்திற்கு விளக்கம்

—//—

மாதிரிப் படத்தில் கட்டுமுறை காட்டப்பட்டுள்ளது.

1 திருக்கேதீச்சரநாதர்—கர்ப்பக்கிருகம்
2 முக மண்டபம்
3 மகாமண்டபம்
4 சண்டேசுரர் கோவில்
5 அம்பாள் கோவில்
6 நிருத்த மண்டபம்
7 நடராசர் சபை
8 பள்ளியறை
9 நந்தி, பலிபீடம் துவஜஸ்தம்பம்
10 களஞ்சியம்
11 பாகசாலை
12 திருப்பதிகம் பாடிய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர்
13 அறுபத்துமூன்று நாயன்மார்
14 அம்பாள் சந்நிதி தெற்கு வாயில்
15 சமயாசாரியார்கள்
16 திருப்பதிகம் பாடிய சுந்தரமூர்த்தி நாயனுர்
17 விநாயகர் கோவில்
18 சோமாஸ்கந்தர் கோவில்
19 மகாவிஷ்ணு கோவில்
20 மகாலிங்கம்
21 பஞ்சலிங்க கோவில்
22 மகாலக்ஷ்மி கோவில்
23 ஸ்ரீ சுப்பிரமணியர் கோவில்
24 அலங்கார மண்டபம் குறடு
25 ஆபரணக் களஞ்சியம் (பாதுகாப்பறை)
26 யாகசாலை
27 வைரவர் கோவில்
28 சூரியன் குறடு
29 மூன்றடுக்கு இராசகோபுரம்
30 சந்திரன்

குறிப்பு :- **2ம் படத்தில் இரண்டாம் வீதியிலுள்ள கட்டட அமைப்புக் காட்டப்படவில்லை.**

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்

"யாழ்ப்பாணச் சமயநிலை" என்னும்
பிரசுரத்தில்

ஆங்கீரச ௵ ஐப்பசி ௴ (1872) எழுதி
வெளியிட்டது.

---

"தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களுள் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருக்கோணமலைக்குச் சம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றிருக்கின்றது; மற்றொன்றாகிய திருக்கேதீச்சுரத்துக்குத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றுஞ் சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றும் இருக்கின்றன. இத் திருக்கேதீச்சுரம் இவ்வடமாகாணத்தின்கணுள்ள மன்னாருக்கு அதிசமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்தினுள்ளது. இத் திருக்கேதீச்சுரம் அழிந்து காடாகக்கிடக்கின்றதே! புதிது புதிதாக இவ்விலங்கையில் எத்தனையோ கோயில்கள் கட்டப்படுகின்றனவே! நீங்கள் இந்த மகாஸ்தலத்தைச் சிறிதும் நினையாததென்னையோ! இவ்விலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந்தொகைப்பொருள் சேர்ந்துவிடும்! இதை நீங்கள் எல்லீருஞ் சிந்தித்து இத் திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின், அருட்கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வர்."

திருச்சிற்றம்பலம்.

# திருக்கேதீஸ்வரம்

## புராதன சிவாலயத்தின் வரலாறு

கந்தையா வைத்தியநாதன்

### சிவவழிபாட்டின் தொன்மை

சிவனே சர்வ வல்லமை பொருந்திய முழு முதற் கடவுளாக வழிபடும் மார்க்கம் பழமைக்குப் பழமையானது. உலகம் எப்பொழுது தோன்றியதோ அப்பொழுதே சிவ வழிபாடும் தோன்றியதெனலாம். இமயமாமலையானது இந்துக்களின் புனித சின்னமாகத் திகழ்வதற்குப் பல நூற்ருண்டுகளுக்கு முன்னரே சிவ வழிபாடு பரத, ஆபிரிக்க, பொலினீசிய கண்டங்களிற் பரவியிருந்தது. இத்தகைய பரந்த நிலப் பரப்பில் நமது இலங்கைத்தீவும் ஒரு சிறு பகுதியாக விளங்கியது.

புதை பொருள் ஆராய்ச்சியாளரான சேர். ஜோன். மார்ஷல் (Sir John Marshall) அவர்கள் (சிந்துவெளி) இந்துநதிப் பள்ளத்தாக்கிலும், ஜோர்ஜ் பர்பிரே (George Fabrei) அவர்களும் ஏனையோரும் மோல்டா (Malta) மடகாஸ்கர் (Madagascar) கிரீட் (Crete) முதலிய இடங்களிலும் நடத்திய புதை பொருள் ஆராய்ச்சியின் விளைவாக, பதினுயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிவன் முழு முதற் கடவுளாக, மகாதேவனுக வழிபட்டு வந்தமை புலனுகின்றது.

### மொகஞ்சதரோ தரும் சான்று

"மொகஞ்சதரோவிலும், ஹரப்பாவிலும் களிமண்ணுற் செய்து சுடப்பெற்ற சிறிய வடிவங்களும், முத்திரைகளும், உலோகத் தகடுகளும், தாயித்துகளும் ஏராளமாகக் கிடைத்துள்ளன. ஒரு முத்திரையில் மூன்று முகங்களைக் கொண்ட மனித உருவம் ஒன்று, கால்களை மடக்கி இரு குதிக்கால்களும் ஒன்று சேர்ந்து காற் பெருவிரல்கள் கீழ் நோக்கி உள்ளவாறு ஆசனமிட்டு யோகத்தில் (யோகாசனம்) அமர்ந்திருப்பதுபோலக் காணப்படுகின்றது. மார்பில் முக்கோண வடிவப் பதக்கங்கள் காணப்படுகின்றன. கைகள் நிறையக் கடகங்கள் பூட்டப்பட்டுள்ளன. இடுப்பில் இரட்டைப் பட்டையாக ஓர் அரைக்கச்சை காணப்படுகிறது. இவ்வுருவத்தின் வலப்புறம் யானை

யும், புலியும், இடப்புறம் எருதும், காண்டா மிருகமும் நிற்கின்றன. இருக்கையின் அடியில் இரண்டு மான்கள் இருக்கின்றன. * யோகியின் தலைமீது வளைந்த எருமைக் கொம்புகள் உள. நடுவில் தடித்த மலர்க்கொத்தோ, இலைக்கொத்தோ நிமிர்த்தி வைக்கப்பட்டுள்ளது. இது சிவனைக் குறிப்பது என்று சேர். ஜோன் மார்ஷல் கருதுகிறார். தலைமீதுள்ள கொம்புகளும், பூங்கொத்தும் பிற்காலத்தில் திரிசூலமாக மாறியிருத்தல் வேண்டும் என்று அறிஞர் அறைகின்றனர். யோகியை அடுத்து விலங்குகள் இருப்பது சிவன்—பசுபதி என்பதைக் குறிக்கின்றதன்றோ? மூன்று தலைகள் நன்கு தெரிவதால், பின்புறம் இரண்டு தலைகள் இருத்தல் கூடும் என்று கூறுகின்றனர். வேறு ஒரு சாரார் 'மூன்று தலைகளும் ஆக்கல், அளித்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களைக் குறிப்பன' என்பர். இதுபோன்ற முத்தலை உருவங்கள் 'ஆபு' மலைக்கருகில் அழிந்துகிடக்கும் கோயில்களிலும், வட ஆற்காடு ஜில்லாவில் காவேரிப்பாக்கத்தை அடுத்த மேலைச் சேரியிலும், பெல்காம் கோட்டத்தில் உள்ள 'கோகாக்' நீர்வீழ்ச்சிக்கருகிலும், உதயபுரி சமஸ்தானத்தைச் சேர்ந்த 'சித்தோர்கார்' என்னும் இடத்திலும் காணப்பட்டன. எனவே சிவ வணக்கம் மிகமிகத் தொன்மைவாய்ந்ததென்பதற்கு மேற்கூறிய முத்திரையிற்காணப்படும் கடவுளுருவம் சான்று பகர்கின்றது. ஒருமுக மூர்த்திக்குள்ள சிறப்புப் போன்று, கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே மும்முக மூர்த்தியும் சிறப்புடன் விளங்கியது.

இமயமலைக்கு வடபால் 1008 சிவாலயங்களும், இமயமலைக்கும் கன்னியாகுமரிக்கும் இடையில் 1008 சிவாலயங்களும், கன்னியாகுமரிக்குத் தென்பாலுள்ள கண்டத்தில் 1008 சிவாலயங்களும் இருந்தனவாகப் புராணங்கள் குறிப்பிடுகின்றன. குமரிக்குத் தென்பாலுள்ள கண்டத்தில் ஒரு சிறு புள்ளிபோல அமைந்திருப்பது நமது இலங்கை நாடு.

## இலங்கையின் புராதன ஆலயங்கள்

இலங்கையில் சரித்திரகாலத்துக்கு முற்பட்ட மிகவும் புராதனமான கோயில்கள் இருந்திருக்கின்றன. இவற்றுள் மன்னார்ப்பகுதியிலுள்ள மாதோட்டத்திலிருக்கும் திருக்கேதீச்சரமும், திருக்கோணமலையிலுள்ள கோணேசர் ஆலயமுமே இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை தென் கைலாசமாகப் பாராட்டப்படுகின்றன. சமயகுரவர் இவ்விருதலங்களுக்கும் திருப்பதிகம் பாடியருளியிருக்கின்றனர். எனவே இவை இரண்டுமே பாடல்பெற்ற தலங்கள் என்று அழைக்கப்படும் பெற்றிவாய்ந்தன.

---

* சிவபிரான் யானைத் தோலைப் போர்த்து, புலித்தோலை அரையிற் கட்டி, எருதை ஊர்தியாகக்கொண்டு, மானை ஏந்தியுள்ளார் என்பதனை ஈண்டு நோக்குக.

## இரு பெருந் தலங்கள்

இலங்கையை அரசுபுரிந்த இராவணன், கோணேஸ்வரப் பெருமானை நாடோறும் வழிபட்டு வந்தான். இராவணனின் மாமனுகிய மயன் கட்டியதே திருக்கேதீச்சர ஆலயமாகும் எனச் சொல்லப்படுகிறது. இராமர், இராவணனைவென்று, அயோத்திக்கு மீளும் வழியில் திருக்கேதீச்சரப் பெருமானையும் வழிபட்டுச்சென்ருர் எனத் தக்ஷிண கைலாச புராணம் கூறுகின்றது. பஞ்ச பாண்டவர்களில் வில்வீரனை அர்ச்சுனன் தீர்த்தயாத்திரையின்பொருட்டு இலங்காபுரியை அடைந்தபொழுது, திருக்கேதீச்சர ஆலயத்துக்குச்சென்று அங்கு எழுந்தருளியுள்ள திருக்கேதீச்சரப் பெருமானை வழிபட்டான் என்று சொல்லப்படுகின்றது. இத் தீர்த்த யாத்திரையின்போது, மாதோட்டத்திற்கு அண்மையில் உள்ள ஊரிலிருந்து அரசுபுரிந்த அல்லி என்னும் நாககன்னிகையைச் சந்தித்து மணம் புரிந்தான் என்பது ஐதீகம். அல்லி ராணி இருந்து அரசுபுரிந்த கோட்டையின் அழிபாடுகளை, மன்னரிலுள்ள அரிப்புக் கடற்கரையிற் காணலாம் என்று இதற்கு ஆதாரமும் காட்டுவர் ஒரு சாரார்.

## மகா தீர்த்தம்

பௌத்த இலக்கியங்களை நோக்குமிடத்து, இந்தத் தலம் கி. மு. மூன்ரும் நூற்ருண்டிலிருந்து 'மகா தீர்த்த' என்றழைக்கப்பட்டதென அறியக்கிடக்கின்றது. இது அக்காலத்தில் பெருந் துறையாக விளங்கியது. இராமர், அகத்தியர், அர்ச்சுனன் முதலியோர் இத்துறைமுகத்தின் வழியாகவே இலங்கையை அடைந்திருக்கவேண்டும் என்பது ஆராய்ச்சியாளர் முடிபு. எனவே இவர்களுக்குப் பின் இலங்கைக்கு வந்தடைந்த கலிங்க அரச குமாரன் விஜயனும், அவனுடைய தோழர்களும் மாதோட்டத் துறைமுகத்தில் இறங்கியிருத்தல் கூடும் எனக் கருத இடமுண்டு. அங்ஙனமாயின் விஜயனுடன் வந்த உபந்தீசன் என்னும் பிராமணன் பூசை செய்ததாகச் சொல்லப்படும் தலம் திருக்கேதீச்சரமாகவே யிருத்தல் வேண்டுமென்பது கூருதேயமையும்.

## வைபவமாலையுடையார் கூற்று

பதினெட்டாம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் டச்சுக் கவர்னர் கேள்விப்படி யாழ்ப்பாணத்து மயில்வாகனப் புலவர் எழுதிய 'யாழ்ப்பாணவைபவமாலை' யெனும் நூலில் திருக்கேதீச்சரத்தைப்பற்றிக் குறிப்பிடுமிடத்து, "குடிகளை வசப்படுத்திக்கொள்ளும் நோக்கத்தினுல் விசயராசன் சமய வழிபாட்டைக் குறித்துச் சனங்களுக்கு இஷ்டங் கொடுத்திருந்துந் தன் சமயாசாரவொழுக்கத்தைத் தவருமற் காத்துக்கொண்டான். அரசாட்சியை ஆரம்பிக்க முன்னமே விசயராசன் தன் அரசாட்சிக்குப் பாதுகாப்பாக நாலு திக்கிலும் நாலு சிவாலயங்களை எழுப்பிக்கொண்டான். கீழ்த்திசைக்குத்

தம்பலகாமத்துக் கோணேசர் கோவிலை நிறுவி, மேற்றிசைக்கு மாதோட்டத்திற் பழுதுபட்டுக்கிடந்த திருக்கேதீச்சரச் சிவாலயத்தைப் புதுப்பித்து............ .....” எனக் குறிப்பிட்டுள்ளார்.

## பாண்டியர் பணி

பாண்டிய மன்னர்கள் கி. பி. ஆறும் நூற்றுண்டில் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி வேலைகள் செய்திருக்கின்றுர்கள். அக்காலத்தில் மகாதுவட்டா எனப் பெயர் வாய்ந்த துறைமுகம் மாதோட்டம் என மருவியது.

## தேவாரப் பாடல்பெற்ற திருக்கேதீச்சரம்

ஏழாம் ஒன்பதாம் நூற்றுண்டுகளில் வாழ்ந்த திருஞானசம்பந்த சுவாமிகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் திருக்கேதீச்சரத்தைப்பற்றி திருப்பதிகம் பாடியருளினுர்கள். இப்பதிகங்களில் மாதோட்ட நன்னகரின் சீரும் சிறப்பும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

**விருது குன்றமா மேருவி னுணர வாவன லெரியப்பாப்**
**பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெந்நாளும்**
**கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்**
**கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே**

எனப் பாடியருளினுர்கள் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள். “வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட” நன்னகரின் உன்னத நிலையினையும், அங்கே தமிழர் செறிந்து வாழ்ந்து தனியரசு நடாத்திய வரலாற்றினையும் நாம் ஓரளவு கற்பனைசெய்து பார்த்துப் பெருமிதங் கொள்வதற்கு உதவிபுரிவது இராஜரத்னுகரம் எனும் நூலாகும்.

**[“தேவாரகாலங் கண்ட மாதோட்ட வளநாடு” என்னும் கட்டுரையினைப் பிறிதோரிடத்திற் காண்க.]**

## சோழர் கோயிற் பணி

இதற்குப்பின் உள்ள இரு நூற்றுண்டுகளிலும் பலவிதமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கி. பி. 1028ஆம் ஆண்டில் இராசேந்திர சோழ மன்னன் ஆட்சிக்காலத்தில் மாதோட்டம் மிகவும் அழகிய நகரமாகக் காட்சியளித்தது. பத்து சதுர மைல் விஸ்தீரணமுள்ள இந்நகரில் அமைந்த விசாலமான வீதிகளும், பிரமாண்டமான மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் இந்நகருக்கு ஒரு தனியழகை யளித்தன. இன்று மதுரையும், ஸ்ரீரங்கமும் காட்சியளிப்பது போன்று அன்று திருக்கேதீச்சரமும் பொலிவுடன் காட்சியளித்தது. அங்கிருப்பதுபோன்று, திருக்கேதீச்சரமும் ஏழு பிரகாரங்களையும், ஒவ்வொரு பிரகாரத்தின் நான்கு பக்கங்களிலும் வானளாவிய கோபு

ரங்களையும் கொண்ட மாபெரும் கோயிலாகத் திகழ்ந்தது. மாதோட்ட நகரைச்சுற்றி செந்நெற் களனிகளும், கரும்புத் தோட்டங்களும் பொலிந்து விளங்கின. நெய்தற்றொழில் மிகவும் உன்னத நிலையில் இருந்தது. இவற்றிற்குக் கல்வெட்டுகளே சான்று பகரும்.

## இருள் செறிந்த காலம்

திருக்கேதீச்சர வரலாற்றில் பதினாறும் நூற்றாண்டு தொடக்கம் பதினெட்டாம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தை இருள் சூழ்ந்த காலம் என்றே கூறலாம். காலக்கழிவின் இயல்பாலும், கவனயீனத் தாலும் ஏற்பட்ட அழிபாடுகளிலும் பார்க்க, போர்த்துக்கீசரும், டச்சுக் காரரும் செய்த அட்டூழியங்களோ ஏட்டிலடங்கா. இந்த அந்நியர் கள் திருக்கேதீச்சர ஆலயத்தைக் கொள்ளையடித்து, அது இருந்த இடமும் தெரியாது தரைமட்டமாக்கிவிட்டனர். இங்கிருந்த கற்களை எடுத்துச்சென்று மன்னாரிலுள்ள கோட்டையைக் கட்டினர் எனச் சொல்லப்படுகின்றது.

## நாவலர் நற்றொண்டு

சைவமும் தமிழும் தழைக்க அவதரித்த **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்** அவர்கள் முதன் முதலாக 1872ஆம் ஆண்டில் தரைமட்டமாக்கப்பட்ட தலத்தை நினைந்து நினைந்து உருகி அத்தலத்தினை மீண்டும் அர சினரிடமிருந்து பெற்று ஓர் ஆலயம் அமைக்க முயன்றார்கள். கிறீஸ் தவர்களின் எதிர்ப்பினாலும், அக்காலத்தில் இருந்த சைவ நன்மக்கள் போதிய ஊக்கத்துடன் உதவியளியாததினாலும், நாவலரவர்கள் எடுத் துக்கொண்ட பணி, அவர்காலத்தில் நிறைவேறாதுவிட்டமை அவருக் குப் பெருங் கவலையளித்தது. 'யாழ்ப்பாணச் சமயநிலை' என்ற கட்டுரையில் சைவமக்களின்கவனத்தை ஈர்த்து, திருக்கேதீச்சரத்தின் நிலைமையைப்பற்றித் தமது மனக்கொதிப்பை இடித்துரைத்தார். சேர். உவில்லியம் துவைனம் (Sir William Twynam) எனும் வட மாகாண ஏசண்டர் அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணக் கச்சேரி யில் 1893ஆம் ஆண்டு டிசம்பர் 13ம் திகதியன்று நடைபெற்ற பகிரங்க ஏல விற்பனையின்போது 40 ஏக்கர் காட்டுநிலம் 3000 ரூபாவுக்கு யாழ்ப்பாணச் சைவமக்களால் வாங்கப்பட்டது. இந்த அரசாங்க ஏசண்டர் தமது மாகாண நிர்வாக ஆண்டறிக்கையில் திருக்கேதீச்சரத் தின் பண்டைய சிறப்புக்களைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். எனவே **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்** அவர்களின் கனவு, அப்பெரியார் இவ் வுலக வாழ்வை நீத்து 14 ஆண்டுகளுக்குப்பின் நனவாயிற்று.

## போக் என்பவர் செய்த ஆராய்ச்சி

புனருத்தாரண வேலை எதுவும் ஆரம்பமாவதற்கு முன்னர், புராதன ஆலயம் இருந்த இடம் எவ்வாறு காட்சியளித்தது என்பதைப் பற்றிய உண்மையான விபரங்களையறிந்துகொள்வதற்கு, திரு. **டபுள்யு. ஜே. எஸ். போக் ( W. J. S. Boake )** என்ற கவண்மேந்து ஏசண்டர் றேயல் ஆசியச் சங்கக் (கொழும்புக் கிளை) (Royal Asiatic Society, Colombo Branch ) கூட்டமொன்றில் " திருக்கேதீச்சரம், மகா தீர்த்தம், மாதோட்டம் அல்லது மாதோட்டை " எனும் பொருள் பற்றி வாசித்த கட்டுரை பெரிதும் உதவியளிக்கின்றது. இக்கட்டுரை மேற்குறித்த சங்கத்தின் சஞ்சிகையின் 35ம் தொகுதியில் வெளிவந்துள்ளது. அக்கட்டுரையின் ஒரு பகுதியை ஈண்டு எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

> " உடைந்துபோன சிற்ப வடிவங்கள், ஓடுகள், செங்கற் கட்டிகள், மட்பாண்டத் துண்டுகள் சிலவற்றைத் தவிர, புராதன நகரமாகிய கேதீச்சரத்தை நினைவூட்டுதற்குத் தரைமட்டத்துக்குமேல் எதுவுமே கிடையாது. இந்த இடம் முழுவதும் காடுமண்டிவிட்டது. சிற்சிறு பற்றைகள் மூடிவிட்டன. சில தணுக்கு மரங்களும், போபப் (Boabab) என்னும் ஓரின மரங்களும் ஆங்காங்கே காணப்படுகின்றன. பழைய தெருக்கள் இருந்த அடையாளங்கள் காணப்படுகின்றன. இரண்டு மூன்று பழங்கிணறுகளும் உண்டு. மேட்டு நிலத்தின் மத்தியில் காணப்படும் செங்கற் கட்டடத்தின் அத்திவாரம் பழைய மாளிகையின் அத்திவாரம் எனக் கருதப்படுகின்றது. கோயில்வாயில் பழைய கிணற்றுக்கண்மையில் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. "

## சேர். பொன். இராமநாதன் காட்டிய கரிசனை

இந்தக் கட்டுரை வாசிக்கப்பெற்ற கூட்டத்திற்குச் சமுகமளித்திருந்த சேர். பொன். இராமநாதன் அவர்கள்மேற்காட்டிய அறிக்கையிலுள்ள சிலகுறைபாடுகளை எடுத்துக்காட்டி அழகியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினுர்கள். பழைய கட்டடங்கள் இருந்த இடத்தை நோக்குமிடத்து, அவை ஒரு சாதாரண நகரத்தின் அமைப்புகளாகாது, பிரதான கோயிலும் அதைச் சுற்றியுள்ள சிறு கோயில்களும் அமைக்கப்பெற்ற கட்டடங்கள் என்பதும் அங்கேயிருந்த மக்கள் அந்தக் கோயிற் பணியாளரும் தொண்டர்களும் என்பதும் புலனுகும் என எடுத்துக்காட்டினுர்கள் **சேர். பொன். இராமநாதன்** அவர்கள். கோயிலை நடுநாயகமாகக்கொண்டு அமைக்கப்பெற்ற இந்த அரணைச்சுற்றி இரட்டை அகழியிருந்ததைத் திரு. போக் அவர்களும், இதர ஆராய்ச்சியாளர்களும் கவனியாதுவிட்டமை குறிப்பிடத்தக்க

தொன்றுகும். புற அகழியில் கடல் நீரும், உள் அகழியில் சுத்தமான நீரும் நிறைந்திருந்தன என்பது இப்பொழுது புலனாகின்றது. உள் அகழியினை யாவரும் சாதாரணமாகக் கண்டுபிடித்துவிடமுடியாது. இவ்விரு அரண்களும் விலைமதித்தற்கரிய ஆபரணங்களையும், வாகனங்களையும், திருவுருவங்களையுங்கொண்ட கேதீச்சரக் கோயிலுக்குச்சிறந்த பாதுகாப்பளித்திருத்தல்வேண்டும். " சில சிலாசாசனங்கள் கண்டு பிடிக்கப்பட்டு அவற்றின் பிரதிகள் திரு. ஈ.எம். பேர்ட் (E. M. Byrde) அவர்களால் ரேயல் ஆசியச் சங்கத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவைமிகவும் சீரழிந்த நிலைமையிற் காணப்பட்டமையால் அவற்றை வாசித்து விளங்கிக்கொள்ள முடியாதுபோய்விட்டது " என்று திரு. போக் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

### சண்முகநாதனின் ஆராய்ச்சி

நிற்க, புதை பொருள் ஆராய்ச்சிப் பகுதியைச்சேர்ந்த உத்தியோகத்தரும், சிறந்த புத்திக்கூர்மையும் புதைபொருள் ஆராய்ச்சித் துறையில் மேனாட்டறிஞரின் நன்மதிப்பைப்பெற்றவருமாகிய காலஞ் சென்ற எஸ். சண்முகநாதன் அவர்களும், பிறரும், அண்மையில் நடாத்திய ஆராய்ச்சியின்பயனாகச் சில கல்வெட்டுக்களை வாசித்தறியக் கூடியதாகவிருக்கின்றது.

இரட்டை யகழியினாற் சூழப்பெற்ற கட்டடங்கள் பிரதானகோயிலையும், சுற்றுக்கோயில்களையும் அவற்றின்பாற்பட்டனவற்றையுமே கொண்டிருந்தன என சேர். பொன். இராமநாதன் அவர்கள் தூர திருஷ்டியுடன் கூறியுள்ளார்கள் என்பதற்கு ஆதாரமாக இப்பொழுது சில குறிப்புகள் வெளிவந்துள்ளன. கோயிலைச்சார்ந்த கட்டடங்கள் யாவற்றையும் இந்த அகழியாற் சூழப்பெற்ற இடத்துக்குள் அமைக்க வசதியில்லாதுபோகவே, அதற்குப் புறம்பாக வேறிடங்களிலும் அமைக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டதென்றால், இந்தக் கோயிலின் உன்னத நிலையை நீங்கள் ஒருவாறு ஊகித்து அறிந்துகொள்ளலாம். இந்தக் கோயிலில் இருந்து இரண்டு மைல் தொலைவில் இரு கிராமங்கள் உண்டு. ஒன்றின் பெயர் பாப்பாமோட்டையென்பது. இது பிராமணர் அக்கிரகாரம் எனப்பொருள்படும் என்பது யாவர்க்கும் எளிதில் புலப்படும். மற்றக் கிராமத்தின் பெயர் மாளிகைத்திடல் என்பது. மாளிகைகள் கட்டியிருந்த இடம் என்பது இதன் பொருள். இந்தக் கிராமங்களுக்குச் சிறிது தூரத்தில் கமஞ் செய்வதில் ஈடுபட்டுள்ளபெருந்தொகையான மக்களைக்கொண்ட ஒருகுழுவினர் வாழ்கின்றனர். இவர்களின் முன்னோர் கோயிலுக்கு பொன் செய்வினைஞர்களாகவும் கம்மாளராகவும் வந்து சேர்ந்தனர்.

### பல்வேறு நாகரீக அலைகள்

கோயிலிருந்த இடத்தையும் அதன் அயலையும் அகழ்ந்து பார்த்தவிடத்து, மிகவும் பிரபல்யம் வாய்ந்த கோயில் ஒன்றாவது

இருந்திருக்கவேண்டுமென்பது புலனாயிற்று. புராதனப் பெருமை வாய்ந்த இந்த நிலையத்தில் மிகமிகப் பழங்காலந்தொடக்கமாக இருந்துவந்த நாகரிக அலைகளைப் பிரித்தறியக்கூடியதாகவிருக்கின்றது. அவற்றிற்குரிய கட்டடங்களின் அழிபாடுகளும் தென்படுகின்றன.

பழைய கோயில் இருந்த நிலையமும் திருப்பணியும்

தரைமட்டமாக்கப்பெற்ற புராதன கோயில் இருந்த இடம் 1894ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அரசினரிடமிருந்து வாங்கிய கோயிற் காணியில் புராதன கிணறு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதே பழைய கோயில் இருந்த நிலையத்தைத் திட்டமாய் அறிந்துகொள்வதற்கு உதவியாக இருந்தது. பழைய கோயில் இருந்த நிலையமாகக் கருதப்பட்ட இடத்தில் கிண்டிப்பார்த்தபொழுது, போர்த்துக்கீசர் ஆட்சிக்கு முன்னர் பூசிக்கப்பட்டுவந்த சிவலிங்கமும், கணேச விக்கிரகமும் வெளிக்கிளம்பின.

யாழ்ப்பாணத்திலுள்ள சைவ பரிபாலன சபையின் கௌரவ பொருள்வைப்பாளராகத் தொண்டாற்றியவரும், சைவத்தொண்டுகளில் முன்னணியில் நின்று உழைத்துவந்தவருமாகிய பசுபதிச் செட்டியார் அவர்கள் 1894ஆம் ஆண்டிலே குருமாரையும், சிற்பாசாரியர்களையும், மேசன்மாரையும், தொழிலாளரையும் தன்னுடன் அழைத்துச்சென்று, தை மாதம் தொடக்கம் ஆகஸ்டு மாதம் வரை காட்டுக் காய்ச்சல் தாண்டவமாடிய திருக்கேதீச்சரத்தில், சங்கொலி, முழவொலிகட்குப் பதிலாக நரிகள் ஊழையிடும் ஒலியும் கரடிகள் உறுமும் ஒலியும் நிறைந்த கானகத்தில், கொடிய விடப் பாம்புகள் மலிந்த மாதோட்டத்தில், பழைய கோயிலை ஞாபகமூட்டும்பொருட்டு ஒரு சிறு ஆலயமாவது கட்டவேண்டுமென்ற ஆர்வத்தினால்உந்தப்பட்டுத் தம்மாலியன்ற ஆராய்ச்சிகளைச்செய்து ஒரு சிறுகோயிலைக் கட்டினார்கள்.அவர் கட்டிய சிறு கோயிலின் பெரும் பகுதி இன்றும் காணப்படுகின்றது.

ஆரம்பகாலந் தொடங்கி யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ள நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் இல்வாலயத்தில் ஊக்கம் எடுத்து உழைத்துவந்தனர். காலக்கிரமத்தில் கொழும்பில் இருக்கும் பழைய புதிய கதிரேசன் கோயில்களால் இக்கோயில் பரிபாலிக்கப்பட்டு வந்தது. இப்பொழுது திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபையினரால் தெரிவு செய்யப்பட்ட பஞ்சாயத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. சபையின் பிரமாணப்படி இப் பஞ்சாயத்தில் பழைய புதிய கதிரேசன் கோயில்களின் அவ்வப்போதைய பிரதிநிதிகள் இருவர் எப்பொழுதும் இடம் பெறுவர்.

புனருத்தாரண வேலை

இப்போதுள்ள ஆலயம் 1903ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ஆம் திகதி பிரதிட்டைசெய்யப்பட்டதாகும். இது காலகதியில் பழுதடைந்து விட்டபடியால் இதனைப் புதுப்பிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. 1948ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 19ம் திகதி கொழும்பிலேயுள்ள இந்துக்கள் ஒருங்குகூடி திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை எனப் பெயரிய ஒரு திருப்பணிச்சபையை நிறுவினார்கள். இந்தச் சபை வேண்டிக்கொண்டதன்பேரில் 1952ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் கட்டட அமைப்பில் எவ்விதமாற்றமும் செய்யாது புனருத்தாரண வேலை நடைபெற்றது. இதன் பயனாகப் பிரதான கோயிற் பூசைமுட்டின்றி நடைபெற்றுவருவதுடன், சுற்றுப்பிரகாரக்கோயிற்றிருப்பணியும் நடைபெற்று வருகின்றது. திருமதில் (உட்புற எல்லைச் சுவர்) வேலையும், இராஜகோபுர வேலைகளும் நடைபெற்று வருகின்றன. (படம் 2, 6 பார்க்க) திருக்கேதீச்சரநாதன் சந்நிதியும் கௌரியம்பாள் சந்நிதியும் அமைக்கும் கருங்கற்றிருப்பணி விரைவில் ஆரம்பிக்கப்படும். கருப்பக்கிரகமும், அர்த்த மண்டபமும் கருங்கற்றிருப்பணியாகவும், திராவிட சிற்பமுறையைத் தழுவியனவாகவும் இருக்கும். இவை முற்றுப்பெற்றதும் ஆலயத் திருப்பணிவேலையில் முதலாம்படி நிறைவெய்தியது எனக்கொள்ளலாம். வெளிப்புற மதிலையும், வாகனவீதியையும் நாற்றிசையிலும் கோபுரங்களையும் கட்டுவது அடுத்தபடியாகும். கீழைக் கோபுரம் ஏழு மாடிகளைக்கொண்டதாக இருக்கும். வெளிவீதியின் கீழ்த்திசையில் உற்சவமண்டபமும் (வசந்த மண்டபம்) ஏனைய கட்டடங்களும் அமைக்கப்பெறும். வெளிமதிலுக்கு அப்பால் தேரோடும் வீதி அமைக்கப்பெறும். கிழக்குப்பக்கத்திலே பெருந்தொகையான தொண்டர்கள் நின்று வழிபடக்கூடிய விசாலமான வீதி விடப்படும். இவற்றின் அயலில் உத்தியான வனங்கள், பூந்தோட்டங்கள், மடங்கள், சத்திரங்கள், அக்கிரகாரங்கள், கோயிற்பணியாளர் வதியுமிடங்கள் ஆதியனவும் அவற்றிற்குச் செல்வதற்கேற்ற தெரு வீதிகளும் அமைக்கப்பெறும். வேதபாடசாலையொன்றும், தபோவனமொன்றும் அமைக்கவும் திட்டமிட்டுள்ளது.

தென்னிந்தியாவிலும், இலங்கையிலுமுள்ள சைவக்குருமார், ஸ்தபதிகள் முதலியோரின் ஆலோசனையின்பேரிலேயே இந்தக்கட்டட அமைப்புப் படங்கள் தயாரிக்கப்பட்டன. இவை திருக்கேதீச்சரத்தின் புராதனப் பெருமைக்கு ஈடாக இல்லாதிருக்கலாம். எனினும் கௌரி அம்பாள் சமேத திருக்கேதீச்சரத்தானின் திருவருளினால் இலங்கையிலே சிறந்த சிவாலயமாக இது விளங்கும். இவ்வாறு விளங்குவதற்கு அவன் அருள் கூட்டிவைக்கவேண்டுமென அவன் திருத்தாளை வணங்குவோம்.

---

# தேவாரகாலங் கண்ட மாதோட்ட வளநாடு.

—————//—————

[ இது மேற்கண்ட " திருக்கேதீச்சரம்" என்னும் கட்டுரைக்கு ஓர் அநுபந்தமாகத் திரு. "சு. சி. க."வின் பேருதவியுடன் எழுதப்பட்டது. —க. வை. ]

**மா**தோட்டம் என்னும் எழில் மிகுந்த நன்னாட்டின் மத்தியில் பல்லாயிரம் வருடங்களாகப் புகழ் பெற்றிலங்கும் இப்புனித க்ஷேத்திரத்தின் பெருமையினைத் தேவாரங்கள் எங்களுக்கெடுத்தோதுகின்றன. ஏழாம் ஒன்பதாம் நூற்றாண்டில் இம் மாதோட்ட நகர் எங்ஙனம் வளம் பெற்றிலங்கிற்று என்பதைத் திருஞானசம்பந்த சுவாமிகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் திருவாய் மலர்ந்தருளிய தேவாரங்கள் எமக்குத் தெரிவிக்கின்றன.

அக்காலத்தில் தூங்கிருள் வெய்யோற் கொதுங்கிப் புக்கிருந்தாலன்ன இருண்ட பொழில்கள் வானுற வோங்கி மாதோட்டத்துக்கு அழகு செய்து விளங்கின. அச்சோலைகளிலே மாமரங்களும், கமுகமரங்களும், வாழைகளும் நெருங்கிவளர்ந்து செழித்திருந்தன. மாமரங்களிற் பழுத்துக் குலைகுலையாகத் தொங்கும் கனிகளையும், கதலியிற் கனிந்த கனிகளையும் அச்சோலையில் வதியும் குரங்குகள் உண்டு களித்தன. பெடையோடு வண்டுறங்கும் பேரெழில் நன்னாட்டின் அப் பொழில்களில் வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சின. மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சின. அப்பொழில்களினிடத்து வாளை வாவியிலுகண்டெழ வளரிளங்கமுகின் பாளைவாய் அளிமுரன்றெழும். இத்தகைய நீர் வளப்பத்தினை உடையதாய் அம் மாதோட்ட நன்னகர் விளங்கிற்று. அச்சோலைகளில் மலர்ந்து அழகுறப் பொலியும் மலர்களின் இனிய கந்தம் இளந் தென்றற்காற்றுடன் கலந்து அந்நகரில் எங்ஙணும் நறுமணங் கமழ்ந்தது.

"கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்"

என அந்நறுமணத்தினையும்,

"மாவும் பூகமும் கதலியும் நெருங்கு மாதோட்ட நன்னகர் மன்னி"

எனவும்,

"வாழை யம்பொழில் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டம்"

எனவும் திருஞான சம்பந்தசுவாமிகள் திருவாய் மலர்ந்த பாடலில் வரும் அடிகள், அப்பூம்பொழில்களிலே கனிகளையுண்டு மந்திகளுடன் களிகொண்டு விளையாடிய வானரங்களை எம் நினைவுக்குக் கொண்டு வருகின்றன.

"மாவின் கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்னகரில்"

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அப்பொழில்களின் சிறப்பினைக் கூறுவது நோக்கத்தக்கது.

தாது புதையத் தேன் பாய்ந்தொழுகும் அப் பூஞ்சோலைகளிலே நாண்மலர்களின் தேனையுண்டு களிகொண்ட வண்டுகள் ஓயாது ரீங் காரஞ் செய்து கொண்டேயிருந்தன. மாடங்களிலிருந்து மென் யாழ் களினின்றெழும் இனிய ஓசையுடன் மலர்ப் பொழிலிலிருந்து வரும் மதுகரங்களின் ரீங்கார ஒலிகள் போட்டியிட்டன.

"சிறையார் பொழில் வண்டு யாழ்செயும்
கேதீச் சரத்தானை"

எனவும்,

"மட்டுண்டு வண்டாலும் பொழில் மாதோட்ட
நன்னகரில்"

எனவும்,

"வரிய சிறை வண்டு யாழ்செயும் மாதோட்ட
நன்னகரில்"

எனவும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் மாதோட்ட நகரின் கண்ணுள்ள சோலைகளின் சிறப்பினை வியந்து அழகுபடக் கூறுகின்றார். மாதோட்ட நகரிலுள்ள பொழில்களிலே வண்டுகள் பண்ணிசைப்ப மயில்கள் ஆடின.

"வண்டு பண்செய மாமலர்ப் பொழிலிடை மஞ்ஞை
நடமிடும்"

எனத் திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய "பண்டு நால் வருக் கறமுரைத் தருளி" என்னும் பாடலில் வரும் மூன்றும் அடி இதனை எமக்குத் தெரிவிக்கின்றது.

மா, வாழை முதலிய கனிதரு மரங்களும், கமுகுகளும், மலர் தரு மரங்களும் மட்டுமன்றி அம் மாதோட்ட நன்னகரில் தென்னைகளும் நிரை நிரையாகச் செழித்தோங்கி வளர்ந்திருந்தன. ஆங்குத் தென் னந் தோட்டங்கள் நிறைந்திருந்தன என்பதை,

"தெங்கம் பொழில் சூழ்ந்த திருக் கேதீச்சரத்தானே"

எனச் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய பாடலின் ஓர் அடி எமக் குத் தெரிவித்து நிற்கின்றது. அன்றியும் இப் பொழுதுங்கூட ஆங்குத் தென்னைகள் செழித்து வளர்ந்திருப்பதை நாம் காணலாம். கடற் கரையை யடுத்துள்ள நிலமாதலாலும், அதன் தென்பாகம் தென்னைக் குப் பெயர்போன இடமாக இப்பொழுதும் விளங்குவதனாலும், ஆங்குத் தென்னைமரச் சோலைகள் முன்னர் நிறைந்திருந்திருத்தல் வேண்டு மென்பது தெளிவாம்.

மேலும் அம் மாதோட்ட நன்னகர் சகல செல்வங்களும் நிறையப் பெற்றுத் திருவுறையும் பொன்னகராகவும் திகழ்ந்தது. கடலீன்ற முத்துக்களும், வலம்புரிச் சங்கங்களும், விலையுயர்ந்த மணிகளும் அங்கு நிறைந்து குவிந்து கிடந்தன. மாதோட்ட நகரின் செல்வச் சிறப்பினைத் திருஞான சம்பந்த சுவாமிகள்,

"பொன்னிலங்கிய முத்துமாமணிகளும் பொருந்திய
மாதோட்டம்"

எனச் சுருங்கக் கூறி விளங்க வைக்கின்றார். மாதோட்டத்தின் அயலிலுள்ள முழங்குதிரைப் பெருங்கடலில் வெண்சங்குகள் ஏராளமாகக் கிடைத்தன என்பதை,

"வானத்துறு மலியுங்கடல் மாதோட்ட நன்னகரில்"

என்னும் சுந்தர மூர்த்தி சுவாமிகளின் கூற்று நமக்கு மேலும் வலியுறுத்துகின்றது.

முற்காலத்தில் இம்மாதோட்ட நன்னகர் சிறந்ததோர் துறைமுகமாகவும் விளங்கிற்று. சங்குகளும், முத்துக்களும், மணிகளும் மட்டுமன்றிப் பல்வேறு நாடுகளிலிருந்து கொணர்ந்த விலையுயர்ந்த பண்டங்களும் ஆங்குக் குவிந்து கிடந்தன. மாதோட்ட நன்னகர் வாணிபத்திற் சிறந்தோங்கி விளங்கியதனால் அங்கு வாழ்ந்த மக்கள் எவ்வித குறைவுமின்றி நிறை செல்வராய் இன்புற்று வாழ்ந்தனர். அவர்களின் இன்ப வாழ்க்கைக்கு எறிதிரைக் கடலும் உறுதுணையாய் அமைந்து விளங்கிற்று. இதனாலேயே,

"வையம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில்"

எனத் தேவாரங்கள் அந்நகரினைச் சிறப்பித்துக் கூறுகின்றன. மேலும் எறிதிரை கிழித்துக் கனைகடல் கடந்து பிறநாடடைந்து பல பொருள் கொணரும் நாவாய்கள் அத்துறைமுகத்துக்கு வருவதும் போவதுமாக இருந்தன. மாதோட்டம் மிகவும் பெரியதோர் துறைமுகமாக விளங்கிற் றென்பதையும், அதனையடுத்த கடல் கப்பற்போக்குவரத்துக் கேற்றதாயிருந்த தென்பதையும்,

"வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில்"

என்னும் அடியும், முன்னர்க் கூறிய,

"வையம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில்"

என்னும் அடியும் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன.

இங்ஙனம் கடிகமழ் பொழிலணி மாதோட்டம் இருங்கடற் கரையினில் எழில் மிகுந்திலங்கியதற்கு அதன் நடுவண் முழங்குதிரையெறிந்து கழங்கென முத்தாடிச் சென்று கொண்டிருந்த பாலாவி என்னும் திருநதியும் ஒருகாரணமாகும். இன்று அப்பெருநதி ஆற்றுப்

பெருக்கற்றடி சுடும் நிலையில் உள்ளது. மழை பெய்யுங் காலத்து மாத்திரம் அந்நதியில் ஓரளவு நீர் ஓடிச் செல்வதைக் காணலாம். ஏனைய காலத்து வற்றி வரண்டு போய் அந்நதி காட்சியளிக்கும். முற் காலத்தில் வடமத்திய இலங்கையை ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்களும் சிங்கள மன்னர்களும் உழுதுண்டு வாழும் உயர் குடிப் பிறந்தார்க் குதவுவான் வேண்டி அவ்வாற்று உற்பத்தி இடங்கள் தோறும் குளங் கள் வெட்டுவித்து விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு முன்னர் இப்பாலாவி மாதோட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்குக் கிடைத்த ஓர் அரும்பேறென்ன விளங்கிற்று. இந்நதியிற் பாய்ந்து செல்லும் புதுநீரினை மறித்து இடையிடையே தேக்கிப் பல மைல்களுக்குப் பரந்து கிடந்தசெந்நெல்வயல்களுக்கு மாதோட்டமக்கள் நீர்ப்பாய்ச்சி னர். பாலாவியின் நன்னீர் வயல்களின் நிறைதலினுலே நீர் பெற் றுயர்ந்த நிறைபுலங்கள் பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்று அம் மாதோட்ட நகருக்கு மேலும் அழகுசெய்து விளங்கின. அம்மாதோட்ட நகரில் தண்டலை மயில்களாடத் தாமரை விளக்கந்தாங்க வண்டுகள் இனிதுபாட மருதம் வீற்றிருந்தது. அங்ஙனம் முற்காலத்தில் மருத நிலத்தை வளம் படுத்தி எறிதிரைகள் பொருதெழப் பாய்ந்துசென்ற அப்பாலாவி மிக்க ஆழமுடைத்தாய்ப் பரந்து நீண்ட ஆற்றுப் படுக்கை யினைக் கொண்டதாய் விளங்கிற்று. கல்லிடைப் பிறந்து போந்து கட லிடைக் கலந்த அந்த நீத்தத்தின் பெருக்கினைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

"பரிய திரை எறியாவரு பாலாவியின் கரைமேல்"

என்னும் பாடல் அடியின் மூலம் எமக்குத் தெரியவைக்கின்ருர். இத் திருநதி தன்னிற் படிந்தார் எவ்வருணத்தாராயினும், எத்திறத்தாரா யினும் அவர்களின் பவப் பிணிகளனைத்தையும் களைந்து அவர்க்கு முத்தியின்பத்தை நல்கிற்று எனத் தக்ஷண கைலாச மான்மியம் என்னும் நூல் கூறுகின்றது.

"பாவம் வினையறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்"

என்னும் சுந்தரமூர்த்தி நாயனுரின்கூற்று இதனை மேலும் வலியுறுத்து கின்ற தெனலாம்.

இத் திருக்கேதீஸ்வரத்திலே எழுந்தருளியிருக்கும் இறைவனை நித்திய கல்யாண புருஷனெனத் தேவாரங்கள் புகழ்ந்து கூறுகின்றன.

"மத்தம் மதயானையுரி போர்த்த மணவாளன்
..............................................................
.............................திருக்கேதீச்சரத்தானே"

எனப்போற்றிப் பாடுகின்ருர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அங்ஙனம் அவன் நித்திய கல்யாணனென்னின் அங்கு நாள்தோறும் மண

5

முரசின் ஒலி கேட்கவேண்டுமே. மணமகனின் மணிமண்டபத்தினின்ற திரும் மங்கல முரசென்னும்படி மாதோட்ட நகரினயலிலுள்ள மறி கடல் நாள்தோறும் மங்கல ஒலிசெய்து கொண்டேயிருக்கும்.

"மாடெலாம் மணமுரசெனக் கடலினதொலி கவர்
மாதோட்டம்"

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரப் பதிக மொன்றில் வரும் ஓரடி திருக்கேதீஸ்வரத்து மணவாளனின் மங்கல முரசு எது என்பதை எமக்குத் தெரிவியா நிற்கின்றது. அக்கடலானது இன்று ஆழங் குறைந்ததாய் பாரிய கப்பல்கள் செல்வதற்கேற்ற நிலையில் இன்று இல்லாத போதிலும் அக்காலத்தில் சிறந்த கப்பற் போக்குவரத்துக் கேற்றதாய் விளங்கிற் றென்பதையும், அம்மறிகடலில் சங்குகள் ஏராளமாகக் கிடைத்தன என்பதையும், அவ்விருங்கடற் கரையினில் மாதோட்டம் மிக்க புகழ்பெற்றுச் சிறந்த துறைமுகமாக இலங்கிற் றென்பதையும் முன்னரே கூறினோம். இவ்விருங்கடல் கனை கடலெனவும், மறிகடலெனவும், மலிகடலெனவும், வங்கம் மலிகின்ற கடலெனவும், வானத்துறு மலியுங் கடலெனவும், கறையார் கடலெனவும் தேவாரத் திருப்பதிகங்களிற் புகழ்ந்து கூறப்பட்டுள்ளது.

திருக்கேதீஸ்வரம் என்னும் இப்புண்ணிய க்ஷேத்திரம் மூர்த்தி தலம், தீர்த்தம் என்னும் மூன்றும் ஒருங்கே அமையப் பெற்ற ஒரு திவ்ய க்ஷேத்திர மென்பது மேலே கூறியவாற்றான் நன்கு புலனாகும். பண்டு எழில் மிக்கு ஓங்கிய இப்புனித நகர் இடைக்காலத்திற் சிதைவுற்றுக் காடடர்ந்து கிடந்ததை யெண்ணுந் தோறும் சைவாபிமானிகள் அனைவரதும் உள்ளங்கள் நைந்து வருந்துதல் வேண்டுமன்றோ?

---

## அப்பர் சுவாமிகள் திருத்தாண்டகத்தில் திருக்கேதீச்சரம்.

—//—

பூதியணி பொன்னிறத்தர் பூண்நூலர்
பொங்கரவர் சங்கரர் வெண் குழையோர்காதர்
கேதீச்சர மேவினர் கேதாரத்தார்
கெடில வடவதிகை வீரட்டத்தார்
மாதுயரந் தீர்த்தென்னை யுய்யக்கொண்டார்
மழபாடிமேய மழுவாளனர்
வேதிகுடியுளார் மீயச்சூரார்
வீழி மிழலையே மேவினரே.

**3-5-54ல் சைவபரிபாலன சபையாரின் இந்துசாதன விசேஷ வெளியீட்டில் இருந்து எடுக்கப்பட்டது.**

## 1. திருக்கேதீச்சர காணி விற்பனவு:—

1893ம் ஆண்டு மார்கழி மாதம் 13ம் திகதி இந்துசாதனத்தில் இருந்து எடுக்கப்பட்டது.

இன்றைய தினம் இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள சைவர்களுக்- கெல்லாம் ஒரு முக்கியமான தினம். இலங்கைச் சரித்திரத்திலும் குறிப்பிடவேண்டிய முக்கியதினம். இலங்கைத்தீவின் மாதோட்டத்துக்குச் சமீபத்தில் ஒரு மருந்து இருக்கின்றது. ஒரு தேன்பொந்து இருக்கின்றது. ஒரு திரவியம் இருக்கின்றது என முதலிலறிந்து ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்கள் நமக்கெல்லாம் அறிவித்திருந்தார்கள். திருக்கேதீச்சரம் என்னும் சிவாலயத்துக்குரிய நிலத்தை அரசினரிடம் வாங்கி அதில் பழுதுபட்டுப் போயிருந்த ஆலயத்தைப் புதுக்குவிக்க வேண்டுமென்று நாவலரவர்கள் இதற்கு இருபது வருடங்களுக்கு முன் வெளியிட்ட நாள் தொட்டு இத்தேசத்திலுள்ள சைவர்களெல்லோரும் ஒரே மனதோடு "அடியவர் குறைகள் தீர்த்தாண்டருள்வதே விரதம் பூண்ட" பெருங்கருணைக் கடலாகிய சிவபெருமானது திருவடிகளை நோக்கி அரிய பிரார்த்தனைகள்செய்தனர். இந்நிலம் முன்பு இருமுறை வெந்தீசில் விற்கும்படி குறிக்கப்பட்டிருந்தது. ஆயினும் சைவர்களுடைய தவம் பலிக்கும் காலம் சிறிது இருந்தமையால் அந் நேரங்களில் அது விற்கப்படவில்லை. இறுதியில் இன்று விற்கும்படி குறிக்கப்பட்டிருந்தது. ஒன்றரை மாதகாலம் இந்தக் கலியுகத்து நாலாயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்துக்குச்சரியாய் நிகழும் விசய வருஷம் கார்த்திகை மாதம் 29ம் திகதி எப்போது பொழுதுவிடியுமென்று காத்திருந்தவர் அனேகர். அவர்களுடைய மனமெல்லாம் மலர இன்று காலையில் கோழிகள் கூவ மற்றும் பறவைகள் பாடி யார வாரிக்கச் சிவபெருமானுடைய மெஞ்ஞானப் பிரகாசம்போல் ஒளிமலரச் சூரியன் உதயமாயினன்.

நித்திய கருமம் முடித்துத் திருக்கேதீச்சர நாதருடைய திருவடிகளைத் தியானித்துக் கொண்டு சைவர்களெல்லாரும் இன்றைக்குப் 12மணிக்கு முன் யாழ்ப்பாணக் கச்சேரியில் வந்து கூடினார்கள். இந்த விஷயத்தில் போல் வேறொன்றிலும் சைவர்கள் ஒற்றுமை யுடையவர்களாய் திரளவில்லை. நாட்டுக்கோட்டைச் செட்டிமார் சகலரும் அங்கு வந்தார்கள். 25 சதம் சம்பாதிக்கிற கூலிக்காரர் தாமும் வந்தார்கள். பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கும் இந்த நாள் விடுதலை நாளாய் இருந்தது. எல்லாரும் ஒற்றுமை யுடையவர்களாய் தங்கள் தங்களால்

இயன்ற பொருளுபகரித்து நாட்டுக்கோட்டை நகரத்தாரையே சைவர் களுடைய உபயோகத்துக்காக அந்நிலத்தை வாங்கும்படி ஏற்பாடு செய்து கொண்டனர்.

கத்தோலிக்க மதத்தினரும் இச்சமயத்தைத் தப்பவிடவில்லை. இந் நிலம் சைவக் கோவில் இருந்த நிலம் என்பதில் சந்தேகம் இல்லை. கர்ப்பக்கிருகம்முதலான மண்டபங்களுடையவும் துசதம்பபீடம் முதலிய வற்றினுடையவும் அத்திவாரம் இன்றைக்கும் காணப்படுகின்றது. அத்திவாரத்தினுடைய ஆகிருதி யெல்லாம் இது ஒரு சைவக்கோவில் என்பதை நன்ருகக் காட்டும். "ரேயல் ஏஷியாட்டிக் சொசைற்றி" என்னும் கூட்டத்தாருடைய 10ம் இலக்கப் பத்திரிகையிலும் போக்ஸ் Mr. Boakes C.C.S. என்பவரால் இதுசைவக் கோயில் என்றும் அதன் சில வைபவங்களும் சுந்தரமூர்த்தி நாயனுர் இத்தலத்தின் மேற் சொல்லிய தேவாரமொழி பெயர்ப்பும் சொல்லப்பட்டிருக்கின்றன. அர சினருடைய வெந்தீசிலும் திருக்கேதீச்சரம் என்னும் சைவக்கோயில் இருந்து அழிந்த நிலம் என்று காட்டப்பட்டிருக்கின்றது. இப்படி யெல்லாம் இருந்தும் இதில் ஒரு கிறிஸ்தவ ஆலயத்தைக் கட்டலா மென்றெண்ணிப் போலும் கத்தோலிக்கக் கிறிஸ்தவரும் இந்நிலத்தை வாய்விட்டுக் கேட்டார்கள். வயல், தோட்டம் செய்ய இந்நிலத்திலுள்ள அத்திபாரக்கற்கள் இடம் கொடா. வீடுகட்டி வாழலா மென்ருல் இது காடு. புராதன சைவக் கோவில் நிலம் மூவாயிரத்து ஐம்பது ரூபாய் வரையிற் பெறும் என்று நினைத்தார்கள். கிறீஸ்தவர்கள் எவ்வளவு தொகை கேட்டாலும் வாங்கவேண்டுமென்பதே செட்டியார்களுடைய கருத்து. மதுரை, கொழும்பு முதலாம் இடங்களில் உள்ள சைவர்களும் பணம் எவ்வளவானுலும் அனுப்ப ஆயத்தம் என்று தந்திமூலம் அறி வித்தார்கள். இறுதியில் ஸ்ரீ பழனியப்ப செட்டியாருடைய கேள்விப்படி மூவாயிரத்தொருநூறு ரூபாவாக மூன்ரும் முறை கூறி அவருக்குக் கொடுக்கப்பட்டது. சுந்தரமூர்த்திநாயனுர் சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகத்தில் "பாலாவியின் கரைமேல் திடமா யுறைகின்ருன் திருக்கேதீச்சரத்தானே" என்ற அருள்வாக்குப்படி அவரங்கே திடமாய் உறைகின்ற அந்த விசேடம் தான் இந்நிலம் இவ்வளவு சொற்பவிலையில் எமக்கு ஆக்கியது. அருள்வாக்கு ஒன்றும் பொய்ப்பதில்லையே.

## 2. திருப்பணி ஆரம்பம் :—

விஜய ஸு தை மீ 1894ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து திரு. சி. த. மு. பசுபதி செட்டியாரும் சில மேசன்மாரும் வேறும் சில கூலியாட்களும் திருக்கேதீச்சரம்சென்று வாஸ்து சாந்தி கிராம சாந்தி முதலிய கிரிகைகள் செய்து காடுவெட்டிச் சோதித்தபோது அகப்பட்ட கிணறு இறைத்துச் சேறு அள்ளியபிறகு நல்ல தீர்த்தமுடையதாய் இருந்தது. இத்திருக்கேதீச்சரத்தினது அத்திபாரஸ்தானம் ஒரு

வாறு சோதனையால் அகப்பட்டது. சுற்றுப்பிரதிஷ்டாலிங்கமும் ஒன்று அகப்பட்டது. ஆலயம் இருந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டு அதிலுள்ள மண்மேட்டை எடுத்தபோது இவ் ஸ்தலத்துத் தென்மேல் புறத் திருமதில்கள் காணப்பட்டன. அம் மதில்கள் அப்பொழுதிருந்த மண்மேட்டில் ஏழு முழத்துக்குக் கீழே அதன்கீழ் நிலமட்டத்திலிருந்து பதினைந்துமுழ உயரமுடையதாகத் தோன்றின. இவை அடியிற்கருங் கல்லாலும் மத்தியில் முதிரைக்கல்லாலும் அதன்மேல் செங்கல்லாலும் கட்டப்பட்டிருந்தன. விஜய வருஷம் தை மாதம் முதல் (1894) ஜய வருஷம் ஆவணிமாதம் வரை பரிசோதனையில் மாத்திரம் எண்ணூயிரத்துச் சொச்ச ரூபாய் செலவாயிற்று. இத்தலத்திலே கொண்ட அன்பு மிகுதியினலே திரு. பசுபதிச் செட்டியார் தமது ஆன்மார்த்த சிவபூசையிலே இத்தலத்து மூர்த்தியாகிய கௌரிநாயகி அம்பாசமேத கேதீச்சர சுவாமியையும் ஆவாகித்துப் பூசித்துவந்தார்.

---

## திருத்தொண்டர் புராணத்தில் திருக்கேதீச்சரம்.

---

அந்நகரி லமர்ந்தங்க ணினிது மேவி
யாழி புடை சூழ்ந் தொலிக்கு மீழந் தன்னின்
மன்னு திருக் கோணமலை மகிழ்ந்து செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப் பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட்டத்திற்
றிருக் கேதீச்சரத் தண்ணல் செய்யபாத
முன்னிமிகப் பணிந்தேத்தி யன்பரோடு
மூலவாத கிழிபெற்ருர் உவகை யுற்ருர்.

மன்னுமிரா மேச்சரத்து மாமணியை முன்வணங்கிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்ருர் பாம்பணிந்த
சென்னியர்மா தோட்டத்துத் திருக்கேதீச்சரஞ் சார்ந்து
சொன்மலர்மா லைகள் சாத்தித் தூரத்தே தொழுதெழுந்தார்.

---

## வித்துவசிரோன்மணி ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள் செய்த உரையோடு கூடிய திருக்கேதீச்சரத் தேவாரத் திருப்பதிகங்களும், திருக்கேதீச்சர மகிமை என்னும் சிறு நூலும் சேர்த்து 1935ல் திருப்பி அச்சிடப்பட்டபொழுது நல்லூர் ஸ்ரீமான். த. கைலாசபிள்ளை அவர்கள் எழுதிய முகவுரை.

நாம் வசிக்கும் இலங்கையானது இராவணனாலே பூசிக்கப்பட்ட பலகோடி சிவலிங்கங்களை யுடைய புண்ணிய நாடாயிருந்தது. கதிர்காமம் முதலிய மற்றைச் சைவாலயங்களையும் உடையதாயிருந்தது. ஸ்ரீ இராமருடைய பாத தாமரைகள் தீண்டப்பெற்றதாயு மிருந்தது. பின் பௌத்தாலயங்களுக்கும் இடமாயிருக்கின்றது. இவ்விலங்கையைச் சைவருள் எவன் புகழ்ந்தாலும் முதல் அவன் சொல்வது தேவாரம் பெற்ற ஸ்தலங்களாகிய திருக்கேதீச்சரம், திரிகோணமலை என்னும் தலங்களைத் தன்னகத்துடையதும் திருப்புகழ்பெற்ற ஸ்தலங்களுள் கதிர்காமத்தைத் தன்னகத்துடையதும் என்பதேயாம். மற்றைப் பெருமைகளையெல்லாம் பிறகுதான் சொல்லுவான்.

இவ்வளவு பெருமைபெற்ற திருக்கேதீச்சரமானது கேதுவினாலே ஆதியிற் பூசிக்கப்பட்டது. இது இதற்குமுன் நானூறு ஐந்நூறு வருஷங்களிற் போலும் யாதோ காரணத்தால் கிலமாய் விட்டது. இதைப் புதுப்பிக்க விரும்பி, ஆங்கீரசஞ் ஐப்பசிமீ (1872) நாவலரையா அவர்கள் ஒரு விஞ்ஞாபனம் வெளியிட்டார்கள். அது கண்டு, அப்போது அதில் முயற்சித்தவர் அத் திருக்கேதீச்சரத்துக்கு சமீபத்திலுள்ள விடத்தற்றீவு என்னுமிடத்திலிருந்த ஸ்ரீ வி. வேலுப்பிள்ளை என்பவர். ஐயா அவர்களுக்குப் பின், ஸ்ரீ இ. இராமப்பிள்ளை வைத்தியர், வை. ஆறுமுகப்பிள்ளை, த. இராகவப்பிள்ளை முதலானோரும், சில நாட்டுக்கோட்டை நகரத்தாரும் இப்பணியைத் தலைமேற்கொண்டு புரிவாராயினர். இவருள் மு. பசுபதிச் செட்டியாரென்பவர் செய்த முயற்சிகள் மிகப் பலமாகும்.

திருக்கேதீச்சரம் என்னும் ஆலயம் இருந்த நிலம் எப்படியோ அரசினரிடம் விலைக்கு வாங்கப்பட்டுவிட்டது. அதில் ஆலயமுமொன்று சிறிதாக அமைக்கப்பட்டுவிட்டது. அது இப்போது ஒருவாறு நடந்து வருகிறது. இனி அதைப் பெருப்பித்துக் கிரமமாக நடத்தவேண்டியதே இப்போதுள்ள சைவர்மேற் பொறுத்த கடனாயிருக்கின்றது. இதை நிறைவேற்றிவைக்கும் புண்ணியவான்கள் எங்கே பிறந்திருக்கிறார்களோ அறியேம் .........................

---

# திருக்கேதீச்சர மகிமை

## I

விராட் புருடனது சரீரமாகிய பிரமாண்டத்தின் இட நாடிக்கு ஸ்தானமென்று சாந்தோக்கியம் முதலிய உப நிஷத்துக்களிலே எடுத்தோதப்படுவதும், திருமூல நாயனராற் சிவபூமி என்று பாராட்டப்படுவதும், ஐம்பத்தாறு தேசங்களுள் முக்கிய தேசமென்றும் புண்ணிய பூமியென்றுந் தக்ஷிண கைலாச மான்மியத்திலே பேசப்படுவதும், அனுக்கிரக ஸ்தலமென்று மாணிக்கவாசக சுவாமிகளாற் புகழப்படுவதுமாகிய இவ் வீழ தேசத்திலே புராணோத்தமமான சிவ ஸ்தலங்கள் பல உள்ளன. தேவாரம் பெற்ற சிவ ஸ்தலங்கள் திருக்கேதீச்சரம் திருக்கோணசலமென்னுமிரண்டுமாம். அவற்றுள்ளே திருக்கோணசலம், மலைநடுவே சமுத்திரத்தா லெதிருண்டமையால் அதை முன்போலாக்குதற்குங் கிரமமாக வழிப்படுதற்கும் அருமையாயிற்று. திருக்கேதீச்சரமோ விசாலமானதாய் ஆலயத் திருப்பணி முதலியவற்றிற்கு மிகவும் தக்க ஸ்தானமா யிருத்தலினல் சைவ சமயிகளாகிய நாமெல்லாம் இதன் மகிமையை அறியவும் இதனை முன்போலாக்கவும் முயலவேண்டுவது அத்தியாவசியகமாம். இத் திருக்கேதீச்சரம், தன்னிடத்தே இறந்தோருக்குப் பிரணவோபதேசஞ் செய்யுந் தானமாயுஞ் சேது மத்தியமாயு மிருத்தலால், தலவிசேஷம் மிகவு முடையது. பலாவியின் கரையிலே பிண்டமிட்டோருக்குக் கயாசிராத்தபல மெய்து மாதலால் தீர்த்த விசேஷம் மிகவுமுடையது. கேதீச்சர மகாலிங்கம் மானுடலிங்கம் ஆரிடலிங்கம் தேவலிங்கம் காணலிங்கமென்னும் இவைகளிலும் விசிட்ட முடையதும் தன்னினும் விசிட்டமாவது பிறிதில்லாததுமாகிய சுயம்புவாதலாலும் தேவர் முனிவர் முதலியோர்க்கு அபீஷ்ட சித்திமுத்திகளைக் கொடுத்தமையாலும் இலிங்க விசேஷம் மிகவுமுடையது. இவ்வாறு தலம் தீர்த்தம் மூர்த்தி யென்னும் மூன்று விசேஷங்களும் ஓரிடத்திலமைவது மிக வருமை. அவை மூன்றுடன் தேவார திருப்பதிகமும் அமையப்பெற்றிருப்பது அதினும் மிக வருமை. ஆகவே இவையெல்லாம் அமையப்பெற்றுள்ள இத் திருக்கேதீச்சரம் உத்தமோத்தம புண்ணிய க்ஷேத்திரமென்பது யாரும் மறுக்கலாகாத உண்மையாம்.

## II

**ஸ்ரீஸ்காந்தேய புராணத்துத் தக்ஷிண கைலாச மான்மியத்தி லிரண்டா மத்தியாயத்திலே கூறப்பட்டுள்ள திருக்கேதீச்சர வைபவம் வருமாறு :**

(சூத முனிவர் நைமிசாரணிய வாசிகளை நோக்கி, " முன்னொரு காலத்தில் வாயு பகவான், தன்னோடு மாறுகப் போர்செய்த ஆதிசேடன் ஆயிரம் பண மகுடங்களால் மகாமேருவை மறைக்க, அவனை விலக்க, அம் மகாமேருவின் மூன்று சிகரங்களை வன்மையாற்

பிடுங்கி, அவற்றுள் ஒரு சிகரத்தை திரிகூடாத்திரியாகத் தாபித்து, முனிவர்களே !) பின்னர் இரண்டாவது சிகரத்தைக் கேதீச்சரமாகத் தாபித்துச் சென்றான். இன்பமுண்டாக்குவோரும் மகாதேவருமாகிய சிவபெருமான், அங்கே சுயம்புவும் நித்திய ரூபமாயெழுந்தருளி யிருக்கின்றார். முனிவர்களே ! கேதீச்சர மஹாலிங்கம் பாலாவியின் கரையிலே சகல லோகங்களுக்கும் நன்மையுண்டாக்கும் பொருட்டு வீற்றிருக்கின்றது. உத்தமனாகிய அந்தணன் அங்கே மகத்தாகிய பாலாவியில் ஸ்நானஞ் செய்து பிதிர் தேவர்களுக்குத் தருப்பணம் பண்ணிக் கேதீச்சர லிங்கத்தை நமஸ்கரித்துத் தசதானமியற்று வானாயின் இவன் சாயுச்சிய பதம் பெறுகின்றான்; நிச்சயம்; எந்த மனிதன் பிறவியிடையே கேதீச்சரத் தியானஞ் செய்வானோ அவன் சகல பாவங்களிலும் நீங்கிப் பரிசுத்தனாய்ச் சிவலோகத்திற் பெருமையுறுகின்றான். (எவனேனுமொருவன்) பாலாவியிலே ஸ்நானம் செய்து பின்பு கேதீச்சரப் பிரபுவை வணங்கினால் அவன் கையிலே போக மோக்ஷங்களிருக்கும். இவ் விஷயத்தில் ஆராய்ச்சி செய்ய வேண்டுவதில்லை. பாலாவியிலே ஸ்நானம் பண்ணிப் பின்பு கேதீச்சர லிங்க சேவை செய்பவன் பிரமகத்தி முதலிய பாவங்களினின் றும் நீங்குகின்றான். இங்கே யமில்லை. உத்தமனாகிய மனிதன் பாலாவியின் கரையிலே பிண்டங் கொடுக்கில் கயாச் சிராத்த சமமாகிய புண்ணியத்தை அடைகின்றான். இவ்விடத்திற் சந்தேக மில்லை.

பிரமா, விஷ்ணு, ருத்திரர் முதலியோரும், தேவர், கந்தருவர், இராக்கதர், வித்தியாதரர், நாகர், சாத்தியர், கின்னர கருடர், ஆதித்தர், வசுக்கள் என்னும் இவர்களும், அங்ஙனமே உண்மையறிந்தோராகிய முனிவர்களும் என்றும் மகிழ்ச்சியடைந்த மனமுடைய ராய் இந்த ஸ்தலத்தில் வசித்தார்கள். ஆதலால் அதன் வைபவத்தை யான் சொல்ல வல்லேனல்லேன். பிறரும் வல்லரல்லர். பசு, பக்ஷி, மனிதர்கள் சகலரும் மிருகம் முதலிய சகல செந்துக்களும் எப்பொழுது மரணமடைந்தாரோ அப்பொழுது கேதீச்சரப் பிரபாவத்தினாற் சிவாலயத்தின் பாகத்திலே தலைவைத்துக் கிடப்பவராவர். தருமரூபியாகிய சிவபெருமான் அவரனைவருடையவும் வலக் காதிலே பிரணவ மந்திரத்தை உபதேசித்தருளுவர்.

ஆதலாற் சாயுச்சிய பதவியை மனிதர், பக்ஷி, மிருகம் முதலிய சகல சரீரிகளுமடைந்தார்கள்; (அதுபற்றி) இந்த ஸ்தலத்தையொத்த புண்ணிய ஸ்தலம் முன்னுண்டாயதுமில்லை; இனியுண்டாவதுமில்லை. * மகாதுவட்டாபுரத்திலே மனிதனாவது செந்துவாவது செனிக்கில் முத்தி அவர் கையதாகும்.

---

* மகா துவட்டாபுரமென்பது மாதோட்டமென வழங்குகின்றது போலும்.

## பழைய ஆலயத்தைச்சுற்றி உள்ள புதுக் கட்டடங்கள் அளிக்குங் காட்சி



1. புதிய இராச கோபுர வாசல்.
2. தென்மேற்கு மூலை. சுவாமி கோயிலும் அதன் பின் புதிதாய் கட்டப்படும் விநாயகர், சோமாஸ்கந்தர், மகாவிஷ்ணு ஆலயங்களும்.
3. புதிய வடக்கு உள் வீதி. அம்பாள் சுவாமி விமானங்களும், புதிய பஞ்சலிங்கம், மகாலக்ஷ்மி, சுப்பிரமணியர் ஆலயங்களும். நீராழி மண்டபத் தோற்றமும் விளங்கும்.
4. கோயிலின் வடக்குத் தோற்றம். திருமதில், வாகனவீதி, தேர்வீதிகளுக்கு அப்பால் இருந்து எடுக்கப்பட்டது.

ஏனைய செல்வங்கள் சொல்ல வேண்டுமா ? நல்லவனாயினும் தீயவனாயினும் இந்த ஸ்தலத்திலே மரணம் வரையும் பாலாவியிலே ஸ்நானம் பண்ணி அதன்மேல் கேதீச்சரப் பிரபுவை வழிபட்டுப் பிக்ஷையெடுத்தாவது விடுத்தாவது இந்திரிய நிக்கிரகஞ் செய்திருப்பானாயின் அவன் குலகோடியோடு கூடிச் சிவசாயுச்சிய மடைவன். இந்த ஸ்தலத்திலே மனிதன் பக்தியோடு பஞ்சாக்ஷர மந்திரத்தைச் செபித்து உருப்போடுவானாயின் அவன் சித்தியடைவன். இதில் ஐயமில்லை. (என்று சொல்ல, முனிவர்கள்) "இந்த ஸ்தலங் கேதீச்சரமென்று முனிவரே நீர் சொன்னீர். மகாதுவட்டாபுரம் என்னும் பெயர் எங்ஙனம் இதற்கெய்தும் (என்று வினவினர். அதுகேட்ட சூதமுனிவர்) முற்காலத்திலே துவட்டா வந்து பாலாவியிலே ஸ்நானஞ் செய்து கேதீச்சர லிங்கத்தைப் பூசித்து உத்தமோத்தமமாகிய தவத்தைச் செய்தான். இவ்வமயத்திலே மகாதேவரும் பிரபுவுமாகிய சிவபெருமான் அவனது தவத்தினாலே திருவுள மகிழ்ந்து பார்ப்பதியம்மையாரோடு தோன்றியருளினர். துவட்டா அவரைத் தரிசித்து மேலாகிய பத்தியோடு துதிக்கத் தொடங்கினான்.

"அம்மையாரோடு கூடியவரே! உருத்திரராகிய உமக்கு நமஸ்காரம். பரமான்மாவாகிய உமக்கு நமஸ்காரம். கேதீச்சரப் பிரபுவே! சேதுமத்திய வாசியாகிய உமக்கு நமஸ்காரம்; நமஸ்காரம். அனைத்துக்கும் நாயகராகிய உமக்கு நமஸ்காரம்; அச்சத்தை யொழிப்பவரே! உமக்கு நமஸ்காரம்; கேதீச்சரப் பிரபுவே! சேதுமத்திய வாசியாகிய உமக்கு நமஸ்காரம்; நமஸ்காரம். கேதீச்சரப் பிரபுவே! ஆதிமத்தியாந்த ரகிதரும் ஆதாரத்திற் குறைவிடமானவரும் சேதுமத்தியவாசியுமாகிய உமக்கு நமஸ்காரம். கேதீச்சரப் பிரபுவே! பிரமாவிஷ்ணு ஸ்வரூபமும் சிருஷ்டி ஸ்திதிகளுக்குக் காரணரும், சேதுமத்தியவாசியுமாகிய உமக்கு நமஸ்காரம்; நமஸ்காரம். கிருபாசமுத்திரமாகிய கேதீச்சரப் பிரபுவே! உமாதேவியாரது திவ்வியமாகிய பாதிவடிவுடையவரும் சேதுமத்திய வாசியுமாகிய உமக்கு நமஸ்காரம்; நமஸ்காரம். சுந்தரமான ஸ்வரூபமுடையவராகிய உமக்கு நமஸ்காரம். சுந்தரமுடைய பார்ப்பதியம்மையாருக்குப் பிராணநாயகராகிய கேதீச்சரப் பிரபுவே! சேதுமத்தியவாசியாகிய உமக்கு நமஸ்காரம்; நமஸ்காரம். உலகத்திற்காதாரமானவரே! உமக்கு நமஸ்காரம். கேதீச்சரப் பிரபுவே! செந்தாமரை மலர்போலும் திருவடிவுடையாரும் சேதுமத்தியவாசியுமாகிய உமக்கு நமஸ்காரம்; நமஸ்காரம். கேதீச்சரப்பிரபுவே!

புத்திரனைத் தருக; அருளைத் தருக; நல்ல புத்தியையுந் தருக; சேது மத்தியவாசியாகிய உமக்கு நமஸ்காரம்; நமஸ்காரம்." இந்த ஸ்தோத்திரத்தினாலே திருவுள மகிழ்ந்து சிவபெருமான் துவட்டாவுக்கு இதனைத் திருவாய்மலர்ந்தருளினார். "துவட்டாவே! சொல்லுதும் கேள். இந்த க்ஷேத்திரம் எவற்றினுமுத்தமோத்தமமானது. ஆதலால், நீ இங்கே வசிக்குக. நம்மீது பத்தி உமக்குண்டாகும். இவ்வுலகத்திலே இன்று தொட்டு இந்த ஸ்தலத்திற்குத் துவட்டாபுரம் என்னும் பெயருண்டாம். நமதருளினால் உமக்கு விசுவகன்மாவெனும் புத்திரனுண்டாவான்" என்று வரங்கொடுத்துச் சிவபெருமான் மறைந்தருளினார். ஆதலால், இந்த ஸ்தலத்தை யொத்த ஸ்தலம் முன்னுண்டானதுமில்லை. இனி யுண்டாவதுமில்லை (என்றுங் கூறினார்).

திருச்சிற்றம்பலம்

---

# மணிவாசகரின் திருவாசகத்தில் திருக்கேதீச்சரம்

---

"ஏர்தருமேழ் உலகேத்த எவ்வுருவுந் தன்னுருவாம்
ஆர்கலிசூழ் தென்னிலங்கை அழகமர்வண் டோதரிக்குப்
பேரருளின் பமளித்த பெருந்துறை மேயபிரானைச்
சீரியவா யாற்குயிலே தென்பாண்டி நாடனைக்கூவாய்"

எனக் குயிற்பத்திலும்,

"வந்திமை யோர்கள் வணங்கியேத்த மாக்கரு ணைக்கட லாயடியார்
பந்தனை விண்டற நல்குமெங்கள் பரமன் பெருந்துறை ஆதியந்நாள்
உந்து திரைக்கட லைக்கடந்தன் றோங்கு மதிலிலங் கைஅதனிற்
பந்தணை மெல்விர லாட்கருளும் பரிசறி வாரெம் பிரானவாரே"

எனத் திருவார்த்தையிலும் கூறியபடி மண்டோதரியின் பொருட்டு நிகழ்த்திய திருவிளையாடல் திருக்கேதீச்சரத்திற்றான் நிகழ்ந்திருத்தல் வேண்டுமெனவும் அவளுடைய தந்தையாகிய மயன் வாழ்ந்த இடம் மாதோட்டமெனவும் சரித்திர ஆராய்ச்சியறிஞர் ஸ்ரீமான் வ. குமாரசாமிப்பிள்ளையவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இஃது உண்மையாயின் திருக்கேதீச்சரத்தின் தொன்மையும் பெருமையும் எத்தகையனவென யூகித்துக்கொள்ளலாம்.

---

உ



## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

அருளிச் செய்த

# திருக்கேதீச்சரத் தேவாரத் திருப்பதிகம்

---

பண்–நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்

விருது குன்றமா மேருவி னாணர வாவன லெரியம்பாற்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெந்நாளுங்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டங்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே. 1

(இ-ள்.) திரிபுரத்திலுள்ளோர்கள் தாங்கொண்ட வெற்றி கெட மகாமேரு வில்லாகவும், சேஷன் நாணாகவும் கொண்டு சுடுகின்ற அக்கினியாகிய அம்பினாலே போர்செய்து அவற்றை அளித்த சிவபெருமான் விரும்பி வீற்றிருக்கும் இடமாக எந்நாளும் நினைக்கப்படுகின்ற ஊராகிய முழங்குகின்ற கடல் சூழ்ந்த வாசனை கமழுஞ் சோலைசெறிந்த மாதோட்டத்திலே எவரும் மதிக்கும்படி உள்ள திருக்கேதீச்சர மென்னுந் தலத்தை வணங்க. அங்ஙனம் வணங்கினோரைத் தீவினைகள் சேரா. எ-று.

பாடல் வீணையர் பலபல சரிதைய ரெருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ் சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது விருங்கடற் கரையினி லெழிறிகள் மாதோட்டங்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே. 2

(இ-ள்.) பாடுகின்ற வீணையை உடையவரும், பலபல ஒழுக்கத்தை உடையவரும், தருமதேவதையாகிய இடபத்தைச் செலுத்திப் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்கிற ஐந்தொழிலாகிய அரிய நடனத்தை விரும்புகின்றவரும், தேவர்கள் முறையிட நஞ்சையுண்டு இருண்டகண்டத்தையுடையவருமாகிய சிவபெருமானுக்கு இடமாவது பெரிய கடற்கரையிற் பொருந்திய அழகு விளங்கு

கின்ற மாதோட்டத்திலுள்ள கேடில்லாத திருக்கேதீச்சர மென்னுந் தலமாம். அதனை வணங்கி எழ வருத்தத்தைச் செய்யுந் தீவினை களெல்லாங் கெடும். எ-று.

தமக்கென ஒரொழுக்கமில்லாராயினும் ஆன்மாக்களுக்கருளு மாறு பற்பல ஒழுங்குகளை மேற்கொண்டமையிற் பலபல சரிதையர் என்றும், பயன்றராவேனை நடனங்கள் போலாகாது ஆன்மாக்களை முத்தியிற் சேர்த்தலாகிய பெரும் பயன்றரும் நடனமாதலின் அரு நட்டமென்றுங் கூறினர்.

**பெண்ணேர் பாகத்தர் பிறைதவழ் சடையின ரறைகழல்**
**சிலம்பார்க்கச்**

**சுண்ண மாதரித் தாடுவர் பாடுவ ரகந்தொறு மிடுபிச்சைக்**
**குண்ண லாவதோ ரிச்சையி னுழல்பவ ருயர்தரு மாதோட்டத்**
**தண்ண னண்ணுகே தீச்சர மடைபவர்க் கருவினை யடையாவே. 3**

(இ-ள்.) தமது திருவருளாகிய சக்தியை ஒரு பாகத்திலுடைய வரும் சுத்த ஞானமாகிய இளம்பிறை தவழும் சடையையுடையவரும், நான்கு வேதங்களாகிய வீரக்கழலும் சிலம்பும் ஒலிக்க விபூதியை விரும்பி அணிபவரும், பற்பல கீதங்களைப் பாடுகின்றவரும், நிரீச்சுர வாதிகளாகிய முனிவர்களுக்கு ஈசன் ஒருவர் உண்டென்னும் உண் மையைப் புலப்படுத்தும் அருள் காரணமாக அவர்கள் வீடுகள்தோறும் இடுகின்ற பிச்சையை உண்ணவேண்டு மென்னும் விருப்பமுடையவர் போலச் சென்றவரும் ஆகிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற உயர்ந்த மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சர மென்னுந் தலத்தை அடைபவர் களைத் தீவினையடையா. எ-று

**பொடிகொண் மேனியர் புலியத ளரையினர் விரிதரு கரத்தேந்தும்**
**வடிகொண் மூவிலை வேலினர் நூலினர் மறிகடன் மாதோட்டத்**
**தடிக ளாதரித் திருந்தகே தீச்சரம் பரிந்தசிந் தையராகி**
**முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேன் மொய்த்தெழும்**
**வினைபோமே. 4**

(இ-ள்.) விபூதியை அணிந்த திருமேனியை உடையவரும், புலித் தோலை உடுத்த அரையை உடையவரும் விரிந்தகையி லேந்துகின்ற கூரிய இச்சை, ஞானம், கிரியை என்னும் முத்தலைச் சூலத்தையுடைய வரும், உபவீதத்தை உடையவருமாகிய சிவபெருமான் விரும்பி வீற்றி ருந்த திரைபொருகின்ற கடல்சூழ்ந்த மாதோட்டத்திலுள்ள திருக் கேதீச்சரத்திலே அன்புகொண்ட மனத்தையுடையராகித் தலைகளைச் சாய்த்து அப் பெருமானுடைய பாதங்களை வணங்கவல்ல தொண்டர் மேலே திரண்டெழுகின்ற தீவினைகள் கெடும். எ-று.

நல்ல ராற்றவு ஞானநன் குடையர்தம் மடைந்தவர்க் கருளிய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர் மலிகடல் மாதோட்டத்
தெல்லை யில்புக ழெந்தைகே தீச்சர மிராப்பக லினைந்தேத்தி
அல்ல லாசறுத் தரனடி யிணைதொழு மன்பரா மடியாரே. 5

(இ-ள்.) மிகவும் நன்மையை உடையவரும், ஞானத்தை மிகவுடையவரும் தம்மையடைந்த அன்பர்களுக்கு அருளைச்செய்ய வல்லவரும், உலகத்திலுள்ள பெரிய பிறப்பிறப்பில்லாதவரும் ஆகிய அளவிறந்த புகழையுடைய சிவபெருமானது வளங்கள் நிறைந்த கடல் சூழ்ந்த மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சர மென்னுந் தலத்தை இரவும் பகலுஞ் சிந்தித்துத் துதித்துத் துதித்து துக்கத்தை முழுதுங் கெடுத்து அப்பெருமானது இருபாதங்களையும் வணங்கும் அன்பர்களே சிவனடியார் என்று சொல்லப்படுவர். எ-று.

ஏனையர் அன்பராகாரென்பதாம்.

பேழை வார்சடைப் பெருந்திரு மகடனைப் பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணிபா லருளிய பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழின் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீண் மார்பர்கே தீச்சரம் பிரியாரே. 6

(இ-ள்.) பரந்து உயர்ந்த பெட்டிபோன்ற சடாமுடியிலே பெரிய கங்கையைப் பொருந்தும்படி வைத்து, ஒரு பாகத்தை அருட்சத்திக்குக் கொடுத்த கொள்கையை யுடையவரும் விஷ்ணுவாகிய பன்றியினது எயிற்றை அணிந்த மார்பையுடையவருமாகிய சிவபெருமான், தமது இருப்பிடமாகிய வாழைச் சோலைகளிலே மந்திகள் மகிழ்ச்சிபெருக இருக்கின்ற மாதோட் டத்திலுள்ள திருக்கேதீச்சர மென்னுந் தலத்தை ஒரு காலத்தும் பிரியார். எ-று.

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல் லுலகினி லுயிர்வாழ்க்கை
கண்ட நாதனர் கடலிடங் கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர் பொழின்மஞ்ஞை நடமிடு மாதோட்டந்
தொண்டர் நாடொறுந் துதிசெய வருள்செய்கே தீச்சர மதுதானே.

(இ-ள்.) முற்காலத்திலே சனகாதி நால்வருக்குந் தருமங்களை உபதேசித்தருளி, பலவுலகங்களிலுமுள்ள ஆன்மாக்கள் அத்தருமங்களை மேற்கொண்டொழுகும் படி செய்த சிவபெருமான் உலகத்துள்ளார் வணங்க விரும்பி வீற்றிருக்குங் கோயில், வண்டுகள் கீதங்களைப் பாடப் பூஞ்சோலைகளில் மயில்கள் கூத்தாடுகின்ற மாதோட்டத்திலுள்ள அடியார்கள் நாடோறும் தோத்திரஞ் செய்ய அப் பெருமான் அவர்களுக்குத் திருவருள் செய்கின்ற திருக்கேதீச்சரமென்னுந் தலமாம். எ-று.

**தென்னி லங்கையர் குலபதி மலைநலிந் தெடுத்தவன் முடிதிண்**
**டோள்**
**தன்ன லங்கெட வடர்த்தவற் கருள்செய்த தலைவனூர் கடல்வாயப்**
**பொன் னிலங்கிய முத்துமா மணிகளும் பொருந்திய மாதோட்டத்**
**துன்னி யன்பொடு மடியவ ரிறைஞ்சுகே தீச்சரத் துள்ளாரே. 8**

(இ-ள்.) கைலாச மென்னும் மலையை வருந்தி எடுத்த தெற்கின் கணுள்ள இலங்கையிலுள்ளார்க் கரசனாகிய இராவணனுடைய தலைகளும் வலிய புயங்களும் தத்தம் நிலைகெட நெரித்துப் பின் அவன் வேண்டுதல் செய்ய அருள்புரிந்த முதல்வர், கடலின்க ணுள்ள பொன்னும் பிரகாசிக்கின்ற முத்துக்களும் மாணிக்கங்களும் செறிந்த மாதோட்டத்திலுள்ள, சிந்தித்து அன்போடு மடியார்கள் வணங்குகின்ற திருக்கேதீச்சர மென்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே. எ-று.

**பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும் புவியிடந் தெழுந்தோடி**
**மேவி நாடிநுன் னடியிணை காண்கிலா வித்தக மென்னுகும்**
**மாவும் பூகமுங் கதலியு நெருங்குமா தோட்ட நன் னகர்மன்னித்**
**தேவி தன்னெடுந் திருந்துகே தீச்சரத் திருந்தவெம் பெருமானே.**

(இ-ள்.) மாமரங்களும் கமுகுகளும் வாழைகளும் நெருங்கிய மாதோட்டமென்னும் நல்ல ஊரிலுள்ள திருக் கேதீச்சரமென்னுந் தலத்திலே நிலையாய கௌரியம்பிகை என்னும் அருட் சக்தியோடு வீற்றிருக்கின்ற நமது கடவுளே! பிரமாவும் விஷ்ணுவும் முறையே அன்னமும் பன்றியுமாய் மேலே பறந்தும் பூமியைக் கிழித்தும் தேடித் தேவரீருடைய முடியையும் அடியையுங் காண்கின்றிலர். அவர்களுடைய கடவுட்டன்மை எவ்வாறுகும்? எ-று.

**புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர் புறனுரைச் சமனுதர்**
**எத்த ராகிநின் றுண்பவ ரியம்பிய வேழைமை கேளேன்மின்**
**மத்த யானையை மறுகிட வுரிசெய்து போர்த்தவர் மாதோட்டத்**
**தத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே தீச்சர மடைமின்னே.**

(இ-ள்.) உலகத்தீரே, புத்தசமயிகளாகிய சில தைத்த வஸ்திரங்களை அணிபவரும், புறங் கூறிப் பலரை வஞ்சித்து நின்று புசிக்கும் சமணர்களாகிய மூடர்களும் போதிக்கின்ற அறியாமையாகிய போதனையைக் கேளாதொழியுங்கள். மதயானையை அஞ்சும்படி யுரித்து, அதன்றோலைப் போர்த்த சகத் பிதாவாகிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற மாதோட்டத்திலுள்ள பாலாவியென்னுந் தீர்த்தக்கரையி லிருக்கின்ற திருக்கேதீச்சரமென்னுந் தலத்தை யடையுங்கள். எ-று.

மாடெ லாமண முரசெனக் கடலின தொலிகவர் மாதோட்டத்
தாட லேறுடை யண்ணல்கே தீச்சரத் தடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொ னவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின் பத்தர்கள் பரகதி பெறலாமே. 11

(இ-ள்.) பக்கங்களிலெல்லாம் மணமுரசைப் போலக் கடலோசை பிறவோசைகளை அடக்கும் மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரம் என்னுந் தலத்தில் வீற்றிருக்கின்ற இடபாரூடராகிய சிவபெருமானைச் சீர்காழித் தலைவனாகிய திருஞானசம்பந்தன் பாடிய இப் பதிகத்தையே அன்பர்களே! நீங்கள் பாடுங்கள்; மோக்ஷத்தைப் பெற்றுக் கொள்ளலாம். எ-று.

நவின்று என்னும் வினையெச்சங்காரணப்பொருட்டு. மாதோட்டத்திலுள்ளார் விரகநோயுடையரன்றி என்றுஞ் சிவத்தியானஞ் செய்யுங் கற்சனராதலின் மண முரசெனக் கடலின தொலிகவர் மாதோட்டம் என்றும், வீரசக்தியாகிய விட்டுணுவே இடபமாதலின் ஆடலேறென்றுங் கூறினர்.

---

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

அருளிச் செய்த

# திருக்கேதீச்சரத் தேவாரத் திருப்பதிகம்

---

பண்—நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்றிருக் கேதீச்சரத் தானே. 1

(இ-ள்.) பாஞ்சசன்னியமென்னும் சங்கையேந்திய ஞானியாகிய விஷ்ணுவென்னும் இடபத்திலேறினவரும், மதத்தால் நனைகின்ற கதுப்புப் பொருந்திய வாயையுடைய யானைத் தோலை உரித்துப் போர்த்த நித்திய கல்யாணரும், இறந்த விஷ்ணு முதலியோர்களுடைய என்பு மாலைகளை அணிபவரும் யாவரென்றால்,அன்பையுடைய அடியார் வணங்குகின்ற பாலாவியென்னுந் தீர்த்தக்கரையி லுள்ள திருக்கேதீச்சர மென்னுந் தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே. எ-று.

ஐம்படைகளுட் சங்கமும் ஒன்ருதலின், நத்தார் படையென்றும், தமோகுண வயத்தராய் என்றுந் துயில் புரிவோர் போலாகாது என்றுஞ் சிவயோக துயில்புரியு மகா ஞானியாதலிற் பசுவாய்த் தாங் கும் பேறடைந்த பெரியர் என்பார், நத்தார்படை ஞானன்பசு என்றுங் கூறினர். பத்தாகிய தொண்டர் என்பதற்குச் சிவபுண்ணியம் பத்தையும் உடையதொண்டர் என்றலும் ஒன்று. பசுஏறுதலும் யானையுரிபோர்த் தலும் எலும்பணிதலும் தாமே முழுமுதற் கடவுள் என்பதற்கேதுவாய் நின்றன. மணவாளன் என்பதும் உடம்போடு புணர்த்தலால் அவ் வாருயிற்று. மத்தம்-களிப்பு.

**சுடுவார்பொடி நீறுந்நல்ல துண்டப்பிறைக் கீளுங்**
**கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்**
**படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்**
**திடமாவுறை கின்ருன்றிருக் கேதீச்சரத் தானே.** 2

(இ-ள்.) விபூதியையும் இளம் பிறையையும் யானைத் தோலையும் அணிந்த நீலகண்டரும், உமாதேவியாரோடு பிரியாதிருப்பவரும் யாரென்ருல், பாலாவியென்னுந் தீர்த்தக் கரையிலுள்ள திருக்கேதீச் சரமென்னுந் தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே. எ-று.

சுடுவார் என்பது சுடுதலார்ந்த என விரியும். ஏர்-உவம உருபு.

**அங்கம்மொழி யன்னுரவ ரமரர்தொழு தேத்த**
**வங்கம்மலி கின்றகடன் மாதோட்டநன் னகரிற்**
**பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேற்**
**செங்கண்ணர வசைத்தான்றிருக் கேதீச்சரத் தானே.** 3

(இ-ள்.) இளம் பிறையைச் சூடினவரும் சிவந்த கண்களையுடைய சர்ப்பக்கச்சையை அணிந்தவரும் யாரென்ருல் வேதவேதாங்கங்களை யறிந்த பிராமணர்களும் தேவர்களும் வணங்கித் துதிக்கத் தோணிகள் நிறைந்த கடல்சூழ்ந்த மாதோட்டமென்னும் நல்ல ஊரிலுள்ள பாலா வியெனுந் தீர்த்தக்கரையிலிருக்கின்ற திருக்கேதீச்சரமென்னுந் தலத் தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே. எ-று.

அங்கத்தை ஒழித்த அத்தன்மையனுய மன்மதனுந் தேவரும் வணங்க எனப் பொருள்கொண்டு மன்மதன் முற்காலத்தில் திருக்கே தீச்சரத்திற் பூசித்தான் என்பாரும் உளர்.

**கரியகறைக் கண்டனல்ல கண்மேலொரு கண்ணுன்**
**வரியசிறை வண்டியாழ்செயு மாதோட்டநன் னகருள்**
**பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்**
**தெரியும்மறை வல்லான்றிருக் கேதீச்சரத் தானே.** 4

(இ-ள்.) நீலகண்டரும், நெற்றிக்கண்ணரும், அறிஞராலறியப் படும் வேதத்தில் வல்லவரும் யாரென்றால், வண்டுகள் கீதங்களைப் பாடுகின்ற மாதோட்ட மென்னும் நல்ல ஊரிலுள்ள பெரிய திரையை வீசிப் பெருகும் பாலாவியென்னுந் தீர்த்தக் கரையிலிருக்கின்ற திருக் கேதீச்சரமென்னுந் தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே. எ-று.

கரியகறை என்பது கருங்கண்ணன் என்பதுபோல நின்றது.

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடன் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே. 5

(இ-ள்.) அடியார்களுக்குச் சரீரத்திலுள்ள நோய்களை நீக்கி யருளுகின்றவர் யாவரென்றால், தமது இடப் பாகத்திலுள்ள கௌரி யம்பிகையென்னும் அருட்சத்தியோடு தோணிகள் நிறைந்த கடல் சூழ்ந்த மாதோட்ட மென்னும் நல்ல ஊரிலுள்ள பாலாவியென்னுந் தீர்த்தக் கரையிலிருக்கின்ற தென்னஞ்சோலை சூழ்ந்த திருக்கேதீச்சர மென்னும் ஸ்தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே. எ-று.

பங்கஞ்செய்த என்பதற்கு ஒரு பாகத்தை வேறுபடுத்திய எனினும் அமையும்.

வெய்யவினை யாயவ்வடி யார்மேலொழித் தருளி
வையமலி கின்றகடன் மாதோட்டநன் னகரிற்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேற்
செய்யசடை முடியான்றிருக் கேதீச்சரத் தானே. 6

(இ-ள்.) அடியார்மீது வருந் தீவினைகளை நீக்கியருளுகின்றவர் யாவரென்றால் பூமியை விருத்திசெய்கின்ற கடல்சூழ்ந்த மாதோட்ட மென்னும் நல்ல ஊரிலுள்ள பாலாவியென்னுந் தீர்த்தக்கரையிலிருக் கின்ற திருக்கேதீச்சரமென்னும் ஸ்தலத்தில் கௌரியம்பிகையோடு வீற்றிருக்கின்ற சிவந்த சடாமுடியையுடைய சிவபெருமானே. எ-று.

ஊனத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடன் மாதோட்டநன் னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்றிருக் கேதீச்சரத் தானே. 7

(இ-ள்.) அடியார்கள்மீது வருகின்ற குற்றம் மிகுந்த நோய்களை நீக்கியருளுகின்றவர் யாவரென்றால், வெண்மையாகிய சங்குகள் மிகுந்து நிறையுங் கடல்சூழ்ந்த மாதோட்டமென்னும் நல்ல ஊரி லுள்ள பாலாவியென்னுந் தீர்த்தக்கரையிலிருக்கும் திருக்கேதீச்சர மென்னுந் தலத்திலே பாலுஞ் சுவை மிகுதியை யவாவுஞ் சொற்களை

யுடைய கௌரியம்பிகையோடு வீற்றிருக்கின்ற பன்றியி னெயிற்றை யணிந்த சிவபெருமானே. எ-று.

ஒழித்தருளிகள் ஒடுங்கி என்பதுபோற் பெயராய் நின்றன. பாலுஞ் சுவைகுன்றுதற் கேதுவாய மொழி யெனினும் அமையும்.

**அட்டன்னழ காகவரை தன்மேலர வார்த்து**
**மட்டுண்டுவண் டாலும்பொழின் மாதோட்டநன் னகரிற்**
**பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்**
**சிட்டன்னமை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே.** 8

(இ-ள்.) அட்டமூர்த்தியாயுள்ளவரும், மேலானவரும், அழகாகத் திருவரையில் சுத்தமாயை ஆகிய சர்ப்பக் கச்சையணிந்து நம்மை யடிமைகொள்பவரும் யாவரென்றால், தேனையுண்டு வண்டுகள் சுழலு கின்ற சோலை சூழ்ந்த மாதோட்டமென்னும் நல்ல ஊரிலுள்ள பாலாவி யென்னுந் தீர்த்தக்கரையிலிருக்கும் திருக்கேதீச்சரமென்னும் தலத் திலே கௌரியம்பிகை யென்னும் அருட்சத்தியோடு வீற்றிருக்கின்ற சிவபெருமானே. எ-று.

**மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி**
**மாவின்கனி தூங்கும்பொழின் மாதோட்டநன் னகரிற்**
**பாவம்வினை யறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்**
**தேவன்னெனை யாள்வான்றிருக் கேதீசரத் தானே.**

(இ-ள்.) பிரமா விஷ்ணு உருத்திரர் எனவும் சத்திசிவமெனவும் பேசப்படுகின்ற மூன்று கண்களையுடைய தலைவராகிய கடவுளும், என்னை அடிமை கொள்பவரும் யாவரென்றால், மரங்களின் தூங்கு கின்ற சோலை சூழ்ந்த மாதோட்ட மென்னும் நல்ல ஊரிலுள்ள இரு வினைகளையுங் கெடுக்கின்ற அடியார் வசிக்கும் பாலாவித் தீர்த்தக்கரை யிலிருக்கின்ற திருக்கேதீச்சர மென்னுந் தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே. எ-று.

பாவந் தீவினையையும் வினை நல்வினையையும் உணர்த்தின. தற் பயன் கருதாது பசுக்களுக்கும் பரிபக்குவ நிகழச் செய்தது பரமுக்தி சேர்க்குமாறு மூவராயும் இருவராயும் இருந்தாரன்றி அவர்க்கவை இயற்கையன்றென்பார் மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி என்றார்.


**கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருட்**
**சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை**
**மறையார்புக ழூரன்னடித் தொண்டன்னுரை செய்த**
**குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே.** 10

(இ-ள்.) கரியகடலைச் சூழ்ந்த கழிக்கரை பொருந்திய மாதோட்ட மென்னும் நல்ல ஊரிலுள்ள பக்கங்களிற் பொருந்திய சோலைகளில் வண்டுகள் கீதங்களைப்பாடும் திருக்கேதீச்சர மென்னுந் தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானைப் பிராமணர்கள் புகழுகின்ற நம்பி யாரூரனாகிய திருவடித் தொண்டன் பாடிய குறைவற்ற திருப்பதி கத்தைப் பாராயணஞ் செய்ய அவரைத் தீவினைகள் அடையா. எ-று.

சிறையார் என்னும் அடையை, வண்டிற் கேற்றினு மமையும்.

திருச்சிற்றம்பலம்.

PLATE No 5.




AMBAL - SHRINE
SIDE ELEVATION
WEST VIEW

SCALE: 1 INCH - 3 FEET.

M. SELLAKKANNU STHAPATI,
M. VAIDHYANATHA STHAPATI,
CONSULTING & PRACTISING ARCHITECTS
KARAIKUDI, S. INDIA.

# JAMBUKOLA (KANKESANTURAI)

AND

# MAHATITTHA (MANTOTA)

AS

## PORTS OF ANCIENT CEYLON.

BY B. J. PERERA.

*(This is an extract from an Article entitled, "The Foreign Trade and Commerce of Ancient Ceylon-I. The Ports of Ancient Ceylon" contributed by Mr. B. J. Perera to Vol. I. No. 2, of* ***The Ceylon Historical Journal,*** *January, 1952.*

*Reprinted here by kind permission of the Editor Mr. S. D. Saparamadu, C. C. S.—K. V.)*

The ports of ancient Ceylon played an important role both in the foreign trade of the Island and in the inter-oceanic commerce between the East and West. Being situated in the middle of the Indian Ocean and to the extreme south of the Indian Peninsula, Ceylon enjoyed a strategic position commanding the sea-routes that linked one side of the ocean with the other. The fleets of Chinese junks carrying silks and ceramic ware to trading stations on the East African coast, and the Arabian vessels which carried the spices of the East Indies to European marts had of necessity to touch at these ports which lay conveniently half-way.

The accounts of Ceylon by foreign traders and travellers on whom we usually have to depend for our information on the foreign trade of the Island in ancient times, have hardly mentioned these ports, and whatever references we get in them are hardly sufficient to construct a connected story of their development. Fortunately however there is a wealth of references in the Pali chronicles and in Sinhalese literature, which supplemented here and there by inscriptions, enable us to gain a glimpse of these ports, their development and organisation.

Jambukola and Mahatittha are the two ports most frequently mentioned in the *Mahavamsa* in its account of the earliest period of the Island's history. It is not possible to determine when exactly these ports came into use, but considering their position in relation to India, we may presume that they were in use long before the

Aryan colonisation of the Island. The *Jatakas* contain a number of references to voyages to Ceylon by North Indian merchants. But none of these works mention by name any of the ports at which they landed. From the account of a voyage given in the *Valahassa Jataka* we may presume that at least one of these ports was situated on the north-western coast of the Island.

Jambukola, identified as the modern Kankesanturai, served as the port to North India especially to Tamralipti in Bengal which in its turn served as the port for Ceylon. In the pre-Christian era it was used exclusively for communications with Bengal with which Ceylon was at that time so intimately connected. It was from this port that the envoys of King Devanampiyatissa set out for the Court of Emperor Asoka. It was also at this port that the sapling of the Sacred Bo-tree was landed. From a reference in the *Mahavamsa* we know that it was connected with Anuradhapura by a highway. "King Devanampiya Tissa did cause the whole of the road from the northern gate even to Jambukola to be made ready." After the time of King Devanampiya Tissa, Jambukola appears to have declined in importance. The distance of Jambukola from Anuradhapura is twice the distance of Mannar from Anuradhapura, and therefore Mannar gave better access to the capital than Jambukola. Jambukola is however occasionally mentioned in the Pali commentaries and Sinhalese works as the port of embarkation and landing for voyages of a religious nature. Perhaps the Jambukola Vihare built at the site where the Sacred Bo-tree was landed in the Island was specially venerated and included in the itinerary of Buddhist devotees both from Ceylon and India.

Mahatittha is the first port to be mentioned by name in the *Mahavamsa*. It was at this port that the wives for Vijaya and his followers landed from South India. An analysis of the references show that this port was used chiefly for contact with South India. Its close proximity to South India and to the Sinhalese capital Anuradhapura made it an important port from the earliest period of Ceylon history. Since the major exports of Ceylon were all royal monopolies the port nearest to the capital would have become the chief port of the Island.

Although Mahatittha is first mentioned in connection with the landing of Vijaya's second wife there is no doubt that it was used as a port by the Tamils long before the Aryan settlement in

